விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 24
ஒலி 139 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 26 ஞாயிற்றுக்கிழமை (07.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## வெடுக்குநாறி மலை விவகாரம்; உயர் நீதிமன்றத்தை நாடவுள்ளேன்

### ஆலயத்துக்கு வந்து பொங்கல் உண்டபின் வீரசேகர வீராப்பு



(வவுனியா)

வெடுக்குநாறி ஆதிலிங் கேஸ்வரர் மலை விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தை நாடப் போவதாக மிரட்டல் தொனியில் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று வெடுக்கு 19

## தமிழர்கள் விடயத்தில் அக்கறையாக உள்ளேன்

லண்டனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



03ஆம் பக்கம் பார்க்க

## பிரிட்டனின் மன்னராக முடிசூடினார் சார்லஸ்





19

# வடக்கு எம்.பிக்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

### கிழக்கு எம்.பிக்களையும் அழைக்காவிட்டால் சந்திப்பை புறக்கணிப்போம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



(யாழ்ப்பாணம்) வடக்கு எம்.பிக்களை சந்திக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ள நிலையில், கிழக்கு மாகாண எம்.பிக்களையும் இச்சந்திப்பில் இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் இல்லாவிடின் குறித்த சந்திப்பை புறக்கணிக்க தயார் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாலையில் வீடு புகுந்து 15 பவுண் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஏழாலை பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் நேற்று முன்தினம் அதிகாலை நுழைந்த கொள்ளைக் கும்பல் சுமார் 15 பவுண் தங்க நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, அதிகாலை வேளை வீட்டில் இருந்தவர்கள் உறங்கிய நிலையில் வீட்டின் 19

### வடக்குக் கிழக்கு உட்பட 4 மாகாணங்களின்

## ஆளுநர்களை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

4 மாகாணங்களின், ஆளுநர்களை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு, கிழக்கு, சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய 4 மாகாணங்களின் ஆளுநர்களையே இவ்வாறு இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி செயலகத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது

வடக்கிற்கு செந்தில் தொண்டமானை புதிய ஆளுநராக நியமிக்கவுள்ளதாக அண்மையில் வெளியான தகவல் தொடர்பாக அமைச்சர் ஜீவன் தொண்டமான் சாதகமான பதிலை வெளியிட்டிருந்தார். 19

### இடி, மின்னல் தாக்கத்தால்

## யாழில் பல வீடுகளில் மின்சாதனங்கள் சேதம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை பெய்த மழை மற்றும் இடிமின்னல் தாக்கத்தால் யாழில் பல வீடுகளில் உள்ள மின்சாதனங்கள் சேதமாகியுள்ளன.

குறிப்பாக ஈச்சமோட்டை பகுதியில் பல வீடுகளில் உள்ள தொலைக்காட்சி, சி.சி.ரிவி கமெரா மற்றும் பெறுமதியான மின்சாதனங்கள் இவ்வாறு சேதமாகியுள்ளன. (4-7,9)

### வலி.வடக்கில்

## பொதுமக்கள் காணியில் இராணுவ வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு வசாவிளான் பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான காணியில் இராணுவ வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வருவதாக வலி.வடக்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் ச.சஜிவன் தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டு வருவது தொடர்பில் பிரதேச சபைக் கூ 19

### யாழ்.பல்கலை கிளி.வளாகம்

## பல்கலைக்கழகமாக தரமுயரும் - டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகம் தனிப் பல்கலைக்கழக [illegible] அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொன்னகர் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் 19

## ஜூனில் மின் கட்டணத்துக்கு நிவாரணம்

### எரிசக்தி அமைச்சர்

(கொழும்பு)

எரிபொருள் விலைகள் மேலும் குறைவடைவதுடன் , ஜூன் மாதம்மின் கட்டணத்தில் சலுகைகளும் மக்களுக்கு வழங்கப் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாகபூசணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு; வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 071 999 9306
077 138 7596

(C-6493)


# அறிவித்தல்

கோட்டைக்காடு மல்லாகம் சாளம்பை முருகன் ஆலயத்தின் புதிய நிர்வாகத் தெரிவானது இன்று 07/05/2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணிக்கு நடைபெற இருக்கின்றது.

09/04/2023 ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலக உத்தியோகத்தர், கிராம அலுவலகர் முன்னிலையில் பொதுச்சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களிற்கு அமையவே இத் தெரிவு நடைபெற இருக்கின்றது.

அனைத்து பொதுச் சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவும்.

(C-6497)

**இங்ஙனம்**
**பரிபாலன சபை உறுப்பினர்கள்**

## கொங்கோவில் திடீர் மழை

# வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி 176 இற்கு மேற்பட்டோர் பலி



(கொங்கோ)

ஆப்பிரிக்க நாட்டின் கிழக்கு கொங்கோவில் உள்ள தெற்கு கிவு மாகாணத்தில் திடீரென மழை பெய்ததால் அங்குள்ள ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின.

வெள்ளத்தில் சில கிராமங்கள் மூழ்கியதில் அப்பகுதி மக்கள் வெள்ளத்தில் மூழ்கி இறந்தனர்.

அப்பகுதியில் உள்ள சாலைகள், பள்ளிகள், மருத்துவமனைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், கொங்கோவில் வெள்ளத்தில் சிக்கியும், நிலச்சரிவில் புதைந்தும் 176 இற்கு மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளனர். மேலும், மாயமான 100 இற்கும் மேற்பட்டோரை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர். வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அந் நாட்டில் நாளை திங்கட்கிழமை தேசிய துக்கதினம் அனுஷ்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4.7.9)

## இலங்கைக்கு மீண்டும் வருவீர்களா?
## மன்னர் சார்லஸிடம் கேட்டார் ரணில்



மன்னர் சார்லஸிற்கு மீண்டும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கு விருப்பம் உள்ளதா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

லண்டனில் அவரை சந்தித்தவேளை ஜனாதிபதி இந்த கேள்வியை எழுப்பியுள்ளார்.

மீண்டுமொருமுறை இலங்கை வருகின்றீர்களா நான் உங்களிற்கு அழைப்பு விடுக்கலாமா என ஜனாதிபதி மன்னர் சார்லஸிடம் வினாவிய போது.

அதற்கு மன்னர் சார்லஸ் சாதகமாக பதிலளித்துள்ளார். (4.7.9)


## தனியார் வகுப்பு

தரம் 11 வரையான மாணவர்களுக்கு கணித பாடம் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
யாழ் நகரை அண்டிய பகுதிக்குள்
(15479)

077 869 5628

## சொர்க்கம் திருமண சேவை

1) 1985 இல் பிறந்த லண்டனில் வசிக்கும் அத்தம் நட்சத்திர மணமகனிற்கு தகுந்த மணமகளை உள்ளூரில் எதிர்பார்க்கின்றோம்.
2) 1991 இல் பிறந்த கனடாவில் PR உள்ள மகம் நட்சத்திர மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
3) 1981 இல் பிறந்த பூச நட்சத்திர (சூரியன். செவ்வாய்) குற்றமுள்ள (DO) மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

சொர்க்கம் திருமண சேவை
(15483)

(கனடா : 0014166661855 / யாழ் : 077 887 6969 / 077 200 0230)


3 ஆம் ஆண்டு நினைவில்

6 ஆம் ஆண்டு நினைவில்



மண் மகிழ் 21 - 07 - 1958
விண் மகிழ் 21 - 12 - 2020



மண் மகிழ் 24 - 10 - 1975
விண் மகிழ் 13 - 05 - 2017

பன்னாலை தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கந்தசாமி நித்தியானந்தன்**

திதி – பூர்வபட்ச அட்டமி

**அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவில்**

பன்னாலையம்பதியில் தனக்கென
தனிமிடுக்குடன் வாழ்ந்த எம்
பாசத்தின் உறைவிடமே
எம் உயர்வுக்காக தனை அர்ப்பணித்த
பெருந்தகை சிவபக்தி மீது
தனையும் தனயனையும் அர்ப்பணித்த
பரமனடி மேவி மூன்றாண்டானதப்பா.

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சைவசித்தாந்த முதுகலைமாணி, ஆன்மீகச் சொற்பொழிவாளர், ஆசிரியர்

**அமரர் நித்தியானந்தன் தசீதரன்**

திதி – அபரபட்ச துதியை

**அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு தினத்தில்**

உத்தமனே நித்திய தசீதரனே உன்னைப்போல்
இத்தரையில் இனி நாங்கள் எவரைத்தான் கண்டிடுவோம்
சுத்தமான உன் வாழ்வும் தூயமனச் சிந்தனையும்
மெத்தவுமே பண்பான பணிவான குணநலனும்
எத்தனை சங்கங்கள் எத்தனை கோயில்கள்
யாவும் ஏங்கிட எங்கு சென்றாய்
ஆறு ஆண்டு கடந்தாலும் உமை நாம் மறவோம்...

பன்னாலை, தெல்லிப்பழை. (C-6496)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சா எண்ணெய் விலை உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நிலவரப்படி இரண்டு அமெரிக்க டொலருக்கு மேல் அதிகரித்துள்ளது.


ஒரு பரல் பிரண்ட் கச்சா எண்ணெய் 72 டொலராக பதிவாகியிருந்த நிலையில், நேற்று முன்தினம் 75 டொலரை தாண்டியுள்ளது.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை 79 அமெரிக்க டொலராக பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அக்கறையாக உள்ளேன்- லண்டனில் ஜனாதிபதி

**(லண்டன்)**

**தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் தாம் அக்கறையாக உள்ளதாக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் புத்திஜீவிகளுடனான சந்திப்பில் தெரிவித்துள்ளார்.**



இங்கிலாந்து மன்னருடைய முடி சூட்டு விழாவிற்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடந்த வியாழக் கிழமை தமிழ் புத்திஜீவிகள் இரவு விருந்து வழங்கினர்.

இதன்போது தமிழ் புத்திஜீவிகள் மத்தியில் கருத்தைப் பகிர்ந்து கொண்ட போது, தமிழ் மக்களுடைய அரசியல் தீர்வு விடயத்தில் நாம் கரிசனையாகச் செயற்படுகிறோம்.

அரசியல் தீர்வு விடயங்களை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு தமிழ்க்கட்சிகளும் அரசாங்கத்தோடு இணைந்து ஒத்துழைப்புக்களை வழங்க முன்வருவர் என நினைக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பு எதிர்வரும் வாரங்களில் இடம்பெற உள்ள நிலையில், தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் விரிவாக கலந்துரையாட உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# எரிபொருள் ஏற்றிச் சென்ற கொள்கலன் விபத்து

### கசிந்த டீசலை எடுத்துச் சென்ற பொதுமக்கள்



(ஹற்றன்)

ஹப்புத்தளை - பத்கொட பகுதியில், எரிபொருள் கொள்கலன் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் கொள்கலன் ஒன்று, சுமார் 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் கொழும்பில் இருந்து ஹப்புத்தளை நோக்கிப் பயணித்துள்ளது.

இதன்போது வீதியை விட்டுவிலகிச் சென்ற எரிபொருள் கொள்கலன் வாகனம், அருகில் உள்ள வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவத்தில் கொள்கலன் வாகனத்தின் உதவியாளர் காயமடைந்து பங்கட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தியத்தலாவை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்தினால், குறித்த வீட்டுக்குச் சேதம் ஏற்பட்டுள்ள நிலையில் வீட்டிலுள்ளவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்படுகின்றது.

இந்த விபத்தினால், குறித்த டீசல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டதையடுத்து, அதிலிருந்து டீசல் வெளியேறியதால், குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் அதனை நிரப்பிச் சென்றனர். (நி)

### நியாயமற்ற வரிக் கொள்கையால்

# நாட்டை விட்டு வெளியேறும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளால் அவர்கள் வழமையை விட அதிகமாக நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழக அமைப்பு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாகவும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னேஹக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 5 வருடங்களை விட கடந்த சில மாதங்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சடுதியாக நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளதாகவும் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு வெளிப்படையாக கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளதாலும், அரச சேவைக்கு புதிதாக ஆட்களை இணைத்துக் கொள்ளாத அரசாங்கத்தின் முடிவினாலும் பல்கலைக்கழக கல்வித்துறை பெரிதும் ஆட்டம் கண்டுள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தில் சுமார் 150 வைத்தியர் வெற்றிடங்களும் பேராதனை பல்கலைக்கழகத்தில் சுமார் 100 வைத்தியர் வெற்றிடங்களும் உள்ளதாகவும் சில பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிவிதிப்பு முறையினால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுமார் 36% வரிச் சுமைக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆனால் அவர்கள் சம்பளத்திற்கு ஏற்றவாறு செலவுகளை நிர்வகித்தாலும் இந்த நியாயமற்ற வரிக் கொள்கையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்பு செலுத்திய வரித் தொகையை விட மூன்று மடங்கு அதிகம் சுமையை எதிர்கொள்கின்றனர்.

இதன்படி, சில விரிவுரையாளர்களின் சம்பளம் மறை நிலைக்கு சென்றுள்ளதாகவும் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)

### புற்றுநோய் மருந்துகள் உட்பட

# பல அத்தியாவசிய மருந்துகளை இலங்கைக்கு வழங்கியது ஈரான்



(கொழும்பு)

ஈரான் குடியரசு 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட புற்றுநோய் மருந்துகள் உட்பட்ட அத்தியாவசிய மருந்துகளை இலங்கை அரசாங்கத்திற்கு சுகாதார அமைச்சின் ஊடாக நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஈரானிய தூதுவர் ஹாசிம் அஷ்ட் இந்த மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நன்கொடையின் கீழ், நாட்டில் புற்றுநோய், இதய நோய், தோல் நோய், வைரஸ் தொற்று, உயர் இரத்த அழுத்தம், பார்கின்சன் போன்ற பல நோய்களுக்கான மருந்துகள் உட்பட பல அத்தியாவசிய மருந்துகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் போது இவ்வாறான அத்தியாவசிய மருந்துகளைப்பெற்றுக் கொள்வது பெரும் நிவாரணம் அளிப்பதாகவும் அதற்காக ஈரான் மக்களுக்கும் ஈரான் குடியரசிற்கும் இலங்கை பிரஜைகள் சார்பாக மிகவும் நன்றி தெரிவிப்பதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

# சீரற்ற காலநிலையால் 9000 இற்கும் அதிகமானோர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையினால் 11 மாவட்டங்களில் 9,000க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சமீபத்திய நிலை அறிக்கை தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உட்பட கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், திருகோணமலை, பதுளை ஆகிய மழை மற்றும் பலத்த காற்றினால் 2,249 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாட்களில் நிலவும் மோசமான வானிலை காரணமாக மூன்று வீடுகள் இழந்துள்ளதுடன் 82 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# வேட்பு மனுவை சமர்ப்பித்த அரச ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் கடமைக்கு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவைச் சமர்ப்பித்த அரச ஊழியர்கள் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்படவுள்ளனர்.

அவர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்த தொகுதியில் இல்லாமல் வேறு தொகுதியில் பணியாற்ற முடியும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இந்த அரச ஊழியர்களுக்கு அவர்களின் அடிப்படை சம்பளம் மட்டுமே வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாலய சாதனையுடன் நியூஸிலாந்தை அடித்து நொறுக்கியது பாகிஸ்தான்

நியூஸிலாந்துக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மிரட்டல் வெற்றி பெற்றது.

கராச்சியின் தேசிய மைதானத்தில் நடந்த நான்காவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது.

அதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணியில் ஃபஹ்கர் ஜமான் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் தொடக்க வீரர் மசூட் உடன் கைகோர்த்த கப்டன் பாபர் அசாம், நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்தக் கூட்டணி 50 ஓட்டங்கள் சேர்த்தது.

அதனைத் தொடர்ந்து பாபர் அசாம் தனது 18 ஆவது ஒருநாள் சதத்தினை பதிவு செய்தார். அத்துடன் ஒருநாள் போட்டிகளில் விரைவாக 5000 ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற இமாலய சாதனையையும் படைத்தார்.

பின்னர் அவர் 107 ஓட்டங்களில் அவுட் ஆன நிலையில், ஷாஹீன் அப்ரிடி 7 பந்துகளில் 23 ஓட்டங்களும் முகமது ஹாரிஸ் 8 பந்துகளில் 17 ஓட்டங்களும் விளாசினர். இதன்மூலம் பாகிஸ்தான் அணி 334 ஓட்டங்கள் குவித்தது. மேட் ஹென்றி 3 விக்கெட்டுகளும் லிஸ்டர் மற்றும் சோதி தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.



மிகப்பெரிய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூஸிலாந்து அணியில் வில்யங் 15 ஓட்டங்களிலும் ப்ளெண்டல் 23 ஓட்டங்களிலும் வெளியேறினர்.

அதன் பின்னர் வந்த மிட்செல் 34 ஓட்டங்களும் கப்டன் லாதம் 60 ஓட்டங்களும் குவித்தனர். ஆனால், உஸாமா மிர் சுழற்பந்து வீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டுகள் சரிந்தன.

அதிரடி காட்டிய மார்க் சாப்மேன் 33 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, மிர் ஓவரில் போல்டு ஆனார். அடுத்து களமிறங்கிய வீரர்களை முகமது வாசிம் மற்றும் மிர் இணை வெளியேற்றியது.

இதனால் நியூஸிலாந்து அணி 43.4 ஓவரில் 232 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது. பாகிஸ்தானின் உஸாமாமிர் 43 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாம் ஆட்டநாயகன் விருது வென்றார். இரு அணிகளுக்கும் இடையேயான கடைசி ஒருநாள் போட்டி இன்று 7 ஆம் திகதி நடைபெற உள்ளது. (4)

## ஒருநாள் உலகக்கிண்ண தொடர்

# நரேந்திர மோடி மைதானத்தில் இந்தியா - பாகிஸ்தான் போட்டி?



எதிர்வரும் ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நேருக்கு நேர் பலப்பரீட்சை செய்ய வாய்ப்புகள் உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

உலகின் பெரிய கிரிக்கெட் மைதானத்தில் உலகக் கிண்ண தொடரின் மிகப் பெரிய மோதல் என இந்தப் போட்டி குறித்து கேப்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இந்தியாவில் 2023 ஒருநாள் உலகக் கிண்ண தொடர் நடைபெற உள்ளது.

10 அணிகள் இந்தத் தொடரில் பங்கேற்று விளையாட உள்ளன. குரூப் சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளோடு விளையாட வேண்டும். புள்ளிப் பட்டியலில் டாப் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். இந்தத் தொடரின் இறுதிப் போட்டி அகமதாபாத் நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளது.

ஆப்கானிஸ்தான், அவுஸ்திரேலியா, வங்கதேசம், இங்கிலாந்து, இந்தியா, நியூஸிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் இந்தத் தொடருக்கு தகுதி பெற்றுள்ளன.

இந்தச் சூழலில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் குரூப் சுற்றில் விளையாட உள்ள போட்டி அகமதாபாத் நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை. அதற்கு முன்னதாக ஆசியக் கிண்ண தொடர் பாகிஸ்தானில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், பாகிஸ்தானுக்கு இந்திய அணி சென்று விளையாடுவது இயலாத காரியமாக உள்ளது.

அதனால், இந்தத் தொடர் வேறு இடத்தில் நடத்தப்படலாம் என சொல்லப்படுகிறது. இரு அணிகளும் ஐ.சி.சி நடத்தும் தொடர்கள் மற்றும் ஆசியக் கோப்பை தவிர நேரடி கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# டெஸ்ட் தொடரில் இருந்து கே.எல்.ராகுல் விலகல்



ஐ.பி.எல் கிரிக்கெட்டில் லக்னோ சுப்பர் ஜெயன்ட்ஸ் அணியின் கப்டனாக செயற்பட்ட தொடக்க ஆட்டக்காரர் லோகேஷ் ராகுல் கடந்த 1 ஆம் திகதி நடந்த பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தின் போது காயமடைந்தார். “ஸ்கேன்” பரிசோதனையில் தசைநார் கிழிந்திருப்பது தெரியவந்ததால் ஐ.பி.எல் கிரிக்கெட்டில் எஞ்சிய போட்டிகளில் இருந்து ஒதுங்கினார்.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி லண்டன் ஓவலில் தொடங்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கான இந்திய அணியில் லோகேஷ் ராகுல் இடம்பெற்றிருந்தார். இந்த நிலையில் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் இருந்தும் ராகுல் விலகினார்.

இது தொடர்பாக ராகுல் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் விளையாட முடியாமல் போவது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. திரும்பி வெற்றிக்கு உதவுவதற்கான எல்லாவற்றையும் செய்வேன்.

அது தான் எனது இலக்கு. எனது காயத்தின் தன்மை குறித்து கவனமாக பரிசீலித்த மருத்துவ குழுவினர், தொடையில் ஏற்பட்ட காயத்துக்கு விரைவில் சிகிச்சை செய்வதே சரியாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

சிகிச்சைக்கு பிறகு அதில் இருந்து மீள்வதற்கான பயிற்சியை விரைவில் தொடங்குவேன் என்று குறிப்பிட்டுள்ளார். (4)

# வரணி வடக்கில் கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி

வட வரணி யாழ்.ஒளி விளையாட்டுக் கழகம் மற்றும் யாழ்.ஒளி இளைஞர் கழகம் ஆகியன நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 7 மணிக்கு வட வரணி யாழ்.ஒளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

விளையாட்டுக்கழகத் தலைவர் வ.நிறோயன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக 15 ஆவது கஜவாகு றெஜிமெண்ட் கட்டளை அதிகாரி மேஜர் டபிள்யூ. ஆர்.பிரசன்ன, கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரணசிங்கே, வட வரணி அ.த.க பாடசாலை அதிபர் ந.வசந்தரூபன், வரணி வடக்கு கிராம அலுவலர் க.தனேஸ்வரன், தென்மராட்சி இளைஞர் சேவை உத்தியோகத்தர் க.றஜீபன் ஆகியோருடன் கௌரவ விருந்தினர்களாக சி.அற்புதராசா, சி.யோகச்சந்திரன் மற்றும் க.குணரத்தினம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.(4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையத்தின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழா சிறப்புமலர் 1943-2023



## ஆசிச்செய்தி

இளவாலையைச் சேர்ந்த சித்திரமேழி எனும் ஊரிலே பழனியானந்தன் சனசமூக நிலையம் 80ஆவது ஆண்டு பூர்த்தி விழாவை நிறைவேற்று வதற்கு எம்பெருமான் வைரவ பெருமானின் அனுக்கிரகத்துடன் நடைபெற உள்ளது.

சனசமூக நிலையங்கள் நான் கேள்விப்பட்ட வகையிலே எல்லா இடங்களிலும் பார்க்க இளவாலையில் இயங்கிக்கொண்டிருக்கும் சனசமூகம் மிகவும் சிறப்பாகவும் ஒரு தலைமையின் கீழ் இயங்கிக்தொண்டு இருக்கிறது.

உள்ளூர் மக்கள் அனைவரும் அனுசரித்து அவர்களுடைய சொற்படி நடந்து கொண்டு இருக்கிறார்கள். அதனால் தான் அந்த சனசமூக நிலையமும் இன்று தனது 80 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து கொண்டு வருகின்றது. மேலும் மேலும் இச் சனசமூக நிலையம் நன்றாக வரவேண்டும். மக்களுக்கு நல்ல சேவைகளைச் செய்து கொண்டு வருகின்றதை அறிவேன். மேலும் மேலும் இச் சனசமூக நிலையம் நல்ல முறையில் வளர வேண்டும் என வாழ்த்தி எல்லோரும் வாழ்க வாழ்க என வாழ்த்தி ஓம் நமசிவாய சிவாய என வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

*ராஜ ராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள்,*
*நகுலேஸ்வரர் ஆதீனம், கீரிமலை.*



## ஆசிச்செய்தி

சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் 1943 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் தனது 80 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவைக் கொண்டாடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சித்திரமேழி கிராமமானது சுற்றிலும் வயல்களால் சூழப்பட்ட. இயற்கை எழில்கொஞ்சும் ஓர் கிராமமாகும். இக் கிராம வாழ் மக்களின் கூட்டு முயற்சியினால் இந்த பழனியானந்தன் சனசமூக நிலையமானது மிகவும் சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது. இச் சனசமூக நிலையமானது இக்கிராம மக்களுக்கு மட்டுமன்றி. ஏனைய கிராமங்களுக்கும் வாழ்வாதார உதவிகள், கல்விசார் உதவிகள், இரத்ததான முகாம்கள், விளையாட்டுச் செயற்பாடுகள் போன்ற பலதரப்பட்ட உதவிகளை மக்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் செய்து வருகின்றது.

இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான சமூக அமைப்புக்களின் தேவை இன்றியமையாததாகும். அந்த வகையில் இச்சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் பாராட்டுதலுக்குரியவை. இச் சனசமூக நிலையமானது தொடர்ந்து தனது சேவைகளைச் செய்வதுடன் மென்மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என எல்லாம்வல்ல ஆனை விழுந்தான் விக்கின விநாயகப் பெருமானும் சித்திரமேழி ஞானவைரவப் பெருமானும் அருள் புரிவார்களாக என ஆசி கூறி அமைகின்றேன்.

*சிவஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள்,*
*சித்திரமேழி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானம்.*



## வாழ்த்துச் செய்தி

இளவாலை சித்திரமேழி பழனி ஆனந்தன் சனசமூக நிலையத்தின் அமுதவிழாக் குறித்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். என்னைப் போன்ற பலருக்கு பயன் தந்த எங்கள் ஊரின் அறிவாலயம் அகவை எண்பதை அடைவது கண்டு யான் ஆனந்தம் அடைகிறேன்.

நூல் நிலையம் என்பது பெரியோர், ஆன்மாக்கள் வாழும் புண்ணியதலம். "எம்மைச் சான்றோனாக்குவதில் பங்கு கொள்பவை" என்ற மேலைத்தேய அறிஞர் "லாம" அவர்கள் குறிப்பிட்ட கூற்று உண்மையானது.

எங்கள் கிராமத்தின் எதிர்காலம் குறித்துச் சிந்தித்த பெரியவர்கள் அன்று எடுத்த முயற்சி வீண்போகவில்லை. அவர்களின் கனவு நனவாகிப் பலருக்குப் பயன் தந்துள்ளது. தற்போது வாசிகசாலை சிறுவர் முன்பள்ளி நிலையத்தோடு கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. வருங்காலத்தில் தகவல் தொடர்பாடலுக்கான நவீன வசதிகளுடைய நூலகமாக வளர்ச்சியடைய வேண்டும் என நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். வாசிகசாலையின் வளர்ச்சிக்காக அன்றும் இன்றும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அனைவரையும் நன்றியோடு வாழ்த்துகிறேன். வருங்காலக் கனவுகளோடு எனது வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

*வைத்திய நிபுணர் த.பேரானந்தராஜா,*
*யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.*



## வாழ்த்துச் செய்தி

சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையம் தனது 80 ஆவது அகவையில் தடம் பதிக்கும் இனிய நாளில் அமுத விழாவினை மிக விமர்சையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அழகிய தருணத்தில் உங்கள் கரங்களில் "அமுதமலர்" எனும் பொக்கிஷம் பரிசாகக் கிடைத்திருக்கின்றது.

வாழ்ந்த காலங்களில் வரலாறுகளை எழுத்து வடிவமாக வார்த்து உயிரோட்டம் பெற்றிடும்போது காலத்தின் கண்ணாடியாக நிலை பெறுகின்றது. நாளைய சமுதாயத்தின் வழிகாட்டியாகத் திகழ இருக்கின்றது. இந் நூலானது எமது நிர்வாக காலப்பகுதியில் வெளிவருகின்ற இரண்டாவது மலர் எனும் பெருமையைப் பெறுகின்றது.

இந்நூல் வெளிவருவதற்கு முன்னின்று உழைத்த நூலாசிரியர், மலர்க்குழுவினர் மற்றும் ஏனைய உதவிகளை வழங்கிய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கின்றேன்.

*திரு.முருகையா நிறஞ்சன், தலைவர்,*
*பழனியானந்தன் சனசமூக நிலையம், சித்தர.மேழி.*

# ஒரு இலட்சம் பேர் போதைக்கு அடிமை

(கொழும்பு)

**இலங்கையில் சிறுவர்கள் உட்பட சுமார் 1 இலட்சம் பேர் தற்போது ஹெரோயின் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளதாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது.**

### தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவிப்பு

ஐஸ்மற்றும்கஞ்சாபாவனைக்கு 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் அடிமையாகியுள்ளனர் என்றும் ஆபத்தான போதைப் பொருள் பாவனையால் இலங்கையில் வருடாந்தம் அனைத்து வயதுகளையும் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

07.05.2023
சித்திரை 24, ஞாயிற்றுக்கிழமை
துதியை முன்னிரவு 9.18 மணிவரை
அனுசம் முன்னிரவு 9.24 மணிவரை
சுபநேரம் 8.55-10.25 முணிவரை
இராகுகாலம் 4.25-5.55
சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி

**வளவன்**




மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல் -வாங்கல்களில் கவனம் தேவை, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.




காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.




தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், உற்சாகமான நாள்.




அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பெற்றோர் மீதான பாசம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.




உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும், தொலைபேசி வழித்தகவல் நெஞ்சம் நெகிழ வைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன சுகமுண்டு.




சுப முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், போசன சுகமுண்டு.




உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நிலையான வருமானத்துக்கு வழியமைத்துக் கொள்வீர்கள்.




குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து செயற்படுவார்கள், விரும்பிய காரியம் விரும்பிய படியே கைகூடும், வழிபாடு குதூகலம் தரும், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.




எடுத்த காரியங்களை முடிக்க சற்று அலைய நேரிடலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.




எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொழுது போக்குகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், பகைவர்கள் விலகுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உழைக்க நேரம் ஒதுக்குங்கள் அது வெற்றியின் விலை.**

# இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

நாட்டில் குருதி வகைகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டினை கருத்திற்கொண்டு அதனை நிவர்த்தி செய்யும் முகமாக சாவகச்சேரி சாரதா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாரதா வீதி சங்கத்தானையில் அமைந்துள்ள சாரதா சனசமூக நிலையம் மற்றும் இளங்கோ பாலர் பாடசாலை வளாகத்தில் காலை 8.30 மணிதொடக்கம் மதியம் 1.30 மணி வரை இரத்ததான முகாம் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-30)

# விபத்தை ஏற்படுத்தும் வகையில் பேருந்தை செலுத்திய சாரதி

## எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

(சாவகச்சேரி-)

விபத்தினை ஏற்படுத்தும் வகையில் அதி வேகமாக பயணித்த தனியார் பேருந்து சாரதியை எச்சரித்த சாவகச்சேரிப் பொலிஸார் பயணிகளின் நலனை- கருத்திற் கொண்டு பேருந்தின் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் விடுவித்தனர்.

வெசாக் தினத்தன்று பிற்பகல் யாழில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்தினை ஏற்படுத்தும் வகையில் பயணித்துள்ளது.

இந்நிலையில் சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் மேற்படி பேருந்தினை வழிமறித்த சாவகச்சேரிப் பொலிஸார் பேருந்து சாரதியை கடுமையாக எச்சரித்த பின்னர் விடுவித்திருந்தனர். (4-6-30)

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் இருந்து கதிர்காமம் யாத்திரை ஆரம்பமாகியது



(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் பாரம்பரிய கதிர்காமத்திற்கான பாதயாத்திரையினை வழமை போல இம்முறையும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து பக்தர்கள் நேற்று ஆரம்பித்தனர்.

கடந்த வருடத்தினை போன்று இவ்வருடமும் ஜெயவேல்சாமி தலைமையில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாதயாத்திரை செல்கின்றனர்.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு,திருகோணமலை, மட்டக்களப்பு,அம்பாறை, மொனராகல ஆகிய 7 மாவட்டங்களையும் இணைத்து 46 நாட்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தை நடந்து கடக்கும் இப்பாதயாத்திரை இலங்கையின் மிக நீண்ட தூர கதிர்காம பாத யாத்திரையாக கருதப்படுகின்றது.

கடந்த 23வருடங்களாக சைவமரபு பாரம்பரியத்துடன் இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரை கதிர்காமக் கந்தனாலய கொடியேற்றத் தினத்தில் கதிர்காமத்தைச் சென்றடைவது வழமையாகும்.


செல்வச் சந்நிதி ஆலயத்தில் காலை நடைபெற்ற விசேடபூசையினைத் தொடர்ந்து மோகன்சுவாமியால் வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக்குழுத்தலைவர் ஜெயவேல்சாமியிடம் சம்பிரதாயபூர்வமாக ஒப்படைக்கப்பட்டதோடு ஆரம்பமாகியுள்ள பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தை அடைந்து பின்னர் அங்கிருந்து வழமையாக பயணிக்கும் நூறுபக்தர்களுடன் பாதயாத்திரை தொடர்ந்து இடம்பெறும்.

பாதயாத்திரைக்கான சகல அனுமதிகளும் வழமை போல பெறப்பட்டிருப்பதாக பாதயாத்திரைக்குழுத் தலைவர் ஜெயவேல்சாமி தெரிவித்தார்.

ஜூன் 19ஆம் திகதி கொடியேற்றம் இடம்பெற்று ஜூலை 4 ஆம் திகதி எசல பெரஹறாவுடனான தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-33-104)

# யாழ்.வல்வெட்டித்துறையில் இந்திர விழா உற்சவம்





(யாழ்ப்பாணம்)

யாழ் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கொடியிறக்க திருவிழாவின் இந்திரவிழா உற்சவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

இதில் முத்துமாரியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களை முத்துப்பல்லக்கில் பக்தர்கள் சுமந்த வண்ணம் வீதி உலா வந்தனர்.

இதில் முக்கிய வீதிகளிலும் வர்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மின்விளக்குகள், கலைநிகழ்ச்சிகள், நடன ஆற்றுகைகள், கவியங்கங்கள், சொற்பொழிவுகள், புகைக் குண்டு ஏற்றல், வான வேடிக்கைகள் இடம்பெற்று நேற்று அதிகாலையில் முத்துமாரி அம்மன்,சமேதராக ஆலயத்தை வந்தடைந்தனர். (4-104)

# கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் வெசாக் தினத்தன்று பிற்பகல் 19 லீற்றர் கசிப்புடன் விசேட அதிரடிப் படையினரால் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வாதரவத்தை பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கைதான நபர் மற்றும் கசிப்பு ஆகியவற்றை சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (4-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 200 |
| தக்காளி | 400 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 240 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 200 |
| கரட் | 160 | 220 | 300 |
| பூசணி | 60 | 40 | 60 |
| புடோல் | 120 | 160 | 150 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 120 | 140 |
| பாகற்காய் | 800 | 400 | 600 |
| வெண்டக்காய் | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 100 | 150 |
| பயற்றங்காய் | 800 | 450 | 400 |
| லீக்ஸ் | 280 | 300 | 300 |
| பீற்றூட் | 240 | 180 | 300 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 1000 | 700 | 1000 |
| போஞ்சி | 450 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 450 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 300 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | 500 |
| முள்ளங்கி | 80 | 100 | 280 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | -- | -- |

## வல்வெட்டித்துறை இந்திர விழாவில்

# பறக்கவிடப்பட்ட புகைக் கூண்டு வீட்டின் மீது வீழ்ந்து விபத்து

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை முத்து மாரியம்மன் ஆலய இந்திர விழாவில் வானில் பறக்கவிடப்பட்ட புகைக் கூண்டு ஒன்று பறந்து பருத்தித்துறை தும்பளை பகுதியில் வீடு ஒன்றின் மீது விழுந்துள்ளது.

யாழ்.வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கொடியிறக்க திருவிழாவின் இந்திரவிழா உற்சவம் நேற்று முன்தினம் இரவு மிக சிறப்பாக இடம்பெற்றது.

இதில் முத்துமாரியம்மன்,விநாயகர்,முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களை முத்துப் பல்லக்கில் பக்தர்கள் சுமந்த வண்ணம் வீதி உலா வந்தனர்.

இதன்போது வானில் பறக்கவிடப்பட்ட புகைக் கூண்டு ஒன்று பருத்தித்துறை தும்பளை பகுதியில் வீடு ஒன்றின்



மீது விழுந்ததால் வீட்டின் மேற் தட்டில் தீவிபத்து ஏற்பட்டது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
Viber 076 636 3378
நாதம் 396



இன அழிப்பு எனும் சொற்பதம் மிகக் கொடூரமானது.அதை யார் மேற்கொண்டாலும் ஏற்றுக் கொள்ள முடியாததுடன் தண்டனைக்குரிய குற்றமானதுமாகும்.

உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பல தலைவர்கள் இன அழிப்பை மேற்கொண்டனர் என்பது உறுதியானதால் தண்டனை அனுபவித்ததான வரலாறுகள் உண்டு.

இன அழிப்பென்பது வெறுமனே கொல்லுதல் என்பதல்ல. ஒரு இனத்தின் பண்பாடு கலாசாரத்தை அழித்தல் அந்த இனத்தின் பூர்வீகத்தை இல்லா தொழித்தல் ஒரு இனத்தின் நிலத்தை ஆக்கிரமித்தல் குறித்த நிலத்தில் தமது இனப் பரம்பலை மேற்கொள்ளல் என்பவையும் இன அழிப்பு என்பதற்குள்ளேயே அடங்கும்.

தமிழினம் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்பதை வரலாறுகளினூடே நிறுவினாலும் அந்த உண்மையை பெரும்பான்மை ஆட்சியாளர்கள் ஒரு போதும் ஏற்க தயாராக இல்லை.

அந்தளவிற்கு தமிழினத்தை சிறுமைப்படுத்தி தமிழர் பூர்வீகங்களை சிங்கள பௌத்த மயமாக்கும் செயற்றிட்டத்தை மிகத் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் இனங்களுக்கிடையில் முரண்பாடு ஏன் எழுந்தது என்ற உண்மையைப் புரிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்தும் அவை எவற்றையும் ஏற்பதற்கோ புரிந்து கொள்வதற்கோ தயாராக இல்லாத பெரும்பான்மை ஆட்சியாளர்கள் தமிழினத்தை பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவதில் தீவிரம் காட்டினர்.

> “தமிழினம் தனது பூர்வீக பூமியில் தனது பண்பாடு கலாசார சிதைவின்றி, நிம்மதியாக வாழ வேண்டும். இதற்கு இலங்கை ஆட்சியாளர்களுக்கு மனமாற்றம்தான் ஏற்பட வேண்டும் என்றில்லை...”

# பௌத்தத் திணிப்பை
## சர்வதேசம் பார்த்துக் கொண்டிருப்பதேன்?

தமிழினமாய் பிறந்த ஒரே காரணத்தினால் தமது உயிர்களை, உறவுகளை, உடமைகளை, அங்க அவையவங்களை என ஒட்டு மொத்தத்தையும் இழந்து நிர்க்கதியாய் நின்றதே 2009 இற்குப் பின்னரான தமிழி னத்தின் வரலாறு ஆகிவிட்டது.

முள்ளி வாய்க்காலில் தமிழினம் அழிக்கப்பட்டு அதன் பலம் இழக்கப்பட்டதன் பின் தமிழினத்தின் பூர்வீகங்கள் அரச இயந்திரங்களினால் கபளீகரம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஏன் என்று தமிழினம் கேட்டால் அதற்குப் பதில் இது சிங்கள பௌத்த நாடு இங்கு நாம் வைத்தது தான் சட்டம் என்றவாறே பதில் அமைகிறது.



அதில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

ஏன் தமிழினம் ஆயுதப் போராட்டத்தை கையில் எடுத்தது என சிந்திப்பதற்கு சிங்கள மக்களுக்கு அவகாசம் வழங்காத பெரும்பான்மை ஆட்சியாளர்கள் ஒட்டு மொத்த தமிழினமும் கொடியவர்களாயும் சிங்கள தேசத்தை ஆக்கிரமிக்க முனைகிறார்கள் என்பதாயும் காட்ட முற்பட்டனர்.

அதன் விளைவு சிங்கள மக்கள் தமிழினத்தை எதிரியாய்ப் பார்க்க முற்பட்டனர்.

அந்தளவில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு வெற்றி என்றே கூற வேண்டும்.

அதன்பின் தமிழினம் பட்ட கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல.தமிழினம் பல இன்னல்களை அனுபவித்தது என்பதே உண்மையானது.

வடக்கில் பௌத்தம் இல்லாத போதிலும் விகாரைகள் சட்ட விரோதமான முறையில் நிர்மானிக்கப்பட்டுக் கொண்டி ருப்பதற்குள் இருக்கும் உள்நோக்கத்தை சர்வதேசம் புரிந்து கொள்ள வேண்டும்.

பௌத்த ஆக்கிரமிப்பு தமிழர் பிரதேசங்களில் திணிக்கப்படுகிறது. என்பதற்கு தையிட்டியில் அமைந்துள்ள பௌத்த விகாரையைச் சுட்டிக்காட்ட முடியும்.

குறித்த விகாரை தனியார் காணிகளை அபகரித்து மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு எதிராக போர்க் கொடி தூக்கும் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது ஏற்றுக் கொள்ள முடியாதது.

குறித்த பௌத்த விகாரைக்கு எதிராக பொது மக்களுடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பொது அமைப்புகள் இணைந்து போராட்டத்தை மேற் கொண்டு வரும் நிலையில் அவர்களை பாதுகாப்புத் தரப்பினர் அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வது சிங்கள பௌத்த திணிப்பை நிரூபித்து நிற்கிறது.

குறித்த போராட்டத்தில் பங்கு கொண்டிருந்த பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் பொலிஸார் நடந்து கொண்டது மிகவும் கண்டிக்கத்தக்கது.

ஆம், குறித்த விகாரையை உடன் அகற்ற வேண்டும் என அறவழிப் போராட் டத்தில் ஈடுபட்ட பொது மக்களைப் பார்த்து போரில் புலிகளை வென்ற எமக்கு உங்களை என்ன செய்ய வேண்டும் எனத் தெரியும் ”தெரிவித்திருக்கின்றனர்.

இவ் விடயம் சர்வ சாதாரணமான விடயம் அல்ல.சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களே இவ்வாறு வன்மத்தைக்கக்கும் , அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடு படுவதை உடன் நிறுத்த வேண்டும்.

குறித்த பேராட்டத்தை தடை செய்யக் கோரி பொலிஸாரினால் மேற் கொள்ளப்பட்ட தடை உத்தரவை இரத்துச் செய்த மல்லாகம் நீதிமன்று, வழிபாட்டுக்கோ, உற்சவத்துக்கோ இடையூறு விளைவிக்காமல் போராட்டத்தை மேற்கொள்ளலாம் என அதிரடியாகத் தெரிவித்திருந்தது.

தமிழர் பூர்வீகங்களை இல்லா தொழித்து இந்த நாட்டை சிங்கள-பௌத்த நாடு எனக் காட்டுவதற்கு பேரினவாதம் மிகத் தீவிரம் காட்டிவரும் நிலையில் தமிழர் தாயகத்தை கூறுபோடும் செயற்பாட்டை உடன் நிறுத்த வேண்டும்.

குறித்த விடயத்தை இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் கண்டும் காணாததுமாய் இருக்குமாக இருந்தால் அது பௌத்தத்தை திணிக்கும் செயற்பாட்டிற்கு ஒத்துப் போகும் செயலாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படும்.

தமிழினம் தனது பூர்வீக பூமியில் தனது பண்பாடு கலாசார சிதைவின்றி நிம்மதியாக வாழ வேண்டும்.

இதற்கு இலங்கை ஆட்சியாளர்களுக்கு மன மாற்றம் தான் ஏற்பட வேண்டும் என்றில்லை.

சர்வதேசம் கூறுமாய்போல் கூறினால் வாலைச் சுருட்டிக் கொண்டிருக்காமலா போகும் இலங்கை அரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் மூப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஈழத்து தமிழ் நாடகத் துறைக்குப் பெரும் பங்காற்றியவரும் சிறந்த கலைஞருமாகிய கலாபூசணம் கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம் அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அவரின் மறைவு கலைத்துறைக்குப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து வாத்தியார் வைத்திலிங்கம் எழுந்தார். எமது அன்புக்குரிய நண்பரும் வடமாகாண பேரவைச் செயலக நிர்வாக உத்தியோகத்தருமான அருளானந்தம் ஆனந்தகுமார் அவர்களின் திடீர் மரணச் செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். தமிழ் இனப்பற்றுக் கொண்ட அவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது. அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி, இன்னமும் மூப்பரைக் காணவில்லை. என்ன சங்கதியோ தெரியல்ல. இவ்வாறு கூற, அந்த நேரம் பார்த்து மூப்பர் கையில மின்சாரப் பொருட்கள் அடங்கிய பொதிகளுடன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார். இதனைப் பார்த்த சாத்திரியார் சதாசிவம்; என்ன? மூப்பர் ஆலடிக்கு மின்சாரம் பொருத்தப் போறாரோ என்று கேட்டார்.

***மூப்பர்:-***சாத்திரியாருக்கு எப்பவும் நளினம் தான். யாழ்ப்பாணத்தில ஏற்பட்ட கடுமையான இடிமுழக்கத்தில வீட்டு பைல்ப்புகள் வெடிச்சு சிதறிப் போயிற்றுது. அதோட என்ர பேரனின்ர கொம்பியூட்டரும் பழுதாய்ப் போய்ச்சுது. அது தான் எல்லாம் வாங்கிக் கொண்டு வாறன்.

***சிறாப்பர்:-*** மூப்பர் அண்ணே எப்பவும் தமிழ் நாட்டின்ர வானிலை அவதான நிலையம் வெளியிடுகின்ற அறிக்கையை நாங்கள் கவனிக்க வேணும்.

தமிழ் நாட்டில பரவலாக மழை பெய்யும். இடிமுழக்கத்துடன் கூடிய கனமழை பெய்யும் என்று அவர்கள் அறிவித்தால் எங்கட வட பகுதியிலும் நிச்சயம் மழை வரும் என்பதை ஊகிக்கலாம்.

**விதானையார்:-** அது சரி, தையிட்டியில கட்டப்பட்ட விகாரையில வெசாக் வழிபாடுகள் நடந்திருக்குது. அப்ப எங்கட ஆட்களின்ர எதிர்ப்பை அவர்கள் பொருட்படுத்தவில்லைப் போல,

**பண்டிதர்:-** இஞ்சே விதானையார், இதெல்லாம் வருமுன்னர் காக்க வேண்டிய விடயங்கள். ***வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்*** என்று வள்ளுவர் சொல்லியல்லோ இருக்கிறார்.

தையிட்டியில விகாரை அமைக்க முற்பட்டபோது, தனியார் காணியில் விகாரை அமைக்கப்படுகிறது.

இதனை ஆரம்பத்திலேயே தடுக்க வேணும் எண்டு சைவ சமயத்தின் முக்கிய தலைவர் ஒருவர் கூறியிருந்தார். ஆனால் அப்பொழுதெல்லாம் எங்கட தமிழ் அரசியல்வாதிகள் பேசாமல் இருந்திட்டினம். அண்டைக்கு இப்படிப் போராடியிருந்தால், விகாரை கட்டுவதற்குத் தடை விதிக்கக்கோரி நீதிமன்றத்திற்குப் போயிருந்தால் அதற்கு நீதிமன்றம் தடை விதித்திருக்கும். இப்ப விகாரை கட்டி முடிச்சாச்சு. இனி நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்யலாம். அதே நேரம் விகாரையில வழிபாடு இடம்பெறுவதைத் தடுக்கவும் முடியாது என்பதாகவே இருக்கும்.

பண்டிதர் இவ்வாறு ஆவேசமாகக் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க விதா[illegible]

**விதானையார்:-** தையிட்டி விகாரை அமைக்கப்படும்போது அதனைத் தடுக்க தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் அரசியல் தரப்புகளும் ஏன் முன்வரவில்லை என்பதை அவர்கள் முதலில் தமிழ் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேணும். இல்லையெண்டால் எல்லாம் அரசியல் செப்படிவித்தை எண்டுதான் எங்கட மக்கள் நினைப்பினம்.

**வாத்தியார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். இந்தாப் பாருங்க யாழ்ப்பாணம் ஆரிய குளத்தில வெசாக் அலங்காரப் பந்தல் அமைக்கப்பட்டிருப்பதுடன் ஆரிய குளத்தைச் சுற்றி வெளிச்சக்கூடுகளும் கட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாநகர சபையின்ர நிர்வாக அதிகாரத்திற்குட்பட்ட ஆரிய குளத்தில, மத சார்பான விடயங்கள் முழுமையாகத் தவிர்க்கப்படும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்குது.

நிலைமை அப்படியாக இருக்கும் போது, ஆரிய குளத்திற்குள்ள வெசாக் அலங்காரப் பந்தலை படையினர் அமைத்திருக்கினம் எண்டால், நாங்கள் நினைத்தால் எதுவும் செய்வம் என்பது தானே அதின்ர பொருள்.

**சிறாப்பர்:-** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. ஆனால் ஆரிய குளத்தில வெசாக் அலங்காரப் பந்தல் அமைக்கப்பட்டதை எங்கட தமிழ் அரசியல்வாதிகள் ஏன் கண்டிக்கவில்லை.

**விதானையார்:-** சிறாப்பர் இதுதான் எங்கட அரசியல். யாழ்ப்பாணம் ஆரிய குளத்தை புனரமைத்து அதில மத விடயங்களுக்கு இடமளிப்பதில்லை எண்ட தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் யாழ்.மாநகர முன்னாள் மேயர் வி.மணிவண்ணன்.

அப்படி இருக்கும் போது, ஆரிய குளத்தில வெசாக் அலங்காரப் பந்தல் அமைத்ததைக் கண்டித்தால், அது மணிவண்ணனுக்குச் சாதகமாகப் போயிருமல்லோ. அதுதான் தமிழ் அரசியல் தரப்புகள் வாய் மூடி மௌனமாக இருக்கினம்.

**சிறாப்பர்:-** அட சங்கதி அப்படியோ. அப்ப யாழ்ப்பாண மாநகர சபை ஏன் நீதிமன்றில வழக்கு வைக்கல்ல.

**விதானையார்:-** அவையள் ஏன் வைக்கப் போகினம். பெரிய இடத்துச் சமாச்சாரத்தில போய் ஏன் மூக்குடைபடுவான். பேசாமல் இருந்திட்டுப் போவம் எண்டுதான் நினைப்பினம்.

**கங்காணி:-** அப்ப முன்னாள் முதல்வர் மணிவண்ணன் வழக்குத் தாக்கல் செய்யலாம் தானே!


**விதானையார்:-** கங்காணியார் இதென்ன இந்து கலாசாரத் திணைக்களமோ-நாவலர் மண்டபமோ வழக்கு வைக்கிறதுக்கு. இது பௌத்தம். ஆகையால கவனமாகத்தான் கையாள வேணும். இந்து சமயம் எண்டால் வழக்கு வைக்கலாம்.

**சிறாப்பர்:-** அப்ப இனி ஆரிய குளத்தில மத சார்பான விழாக்கள் செய்யலாம் எண்டு சொல்லுறியள்.

**விதானையார்:-** ஏன் சிறாப்பர் உருத்திரசேனைக்கு இன்னொரு வேலை வைக்கப்போறியள் போல, (விதானையார் இப்படிக் கூறியதும் ஆலடியில சிரிப்பொலி எழுந்தது.)

சிரிப்பொலியின் ஊடே ஆரியகுளத்து வைரவரும் ஒரு பத்து நாள் ஆரிய குளத்தில அலங்காரமாக இருக்கலாம் எண்டு சொல்லுறன். இப்படி சிறாப்பர் கனகச்பை கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல, ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்



## நாவலர் மண்டபத்துக்கு வழக்கு
## ஆரிய குளத்துக்கு வழக்கு இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைக்கும் பணி மிகத் தீவிரமாக நடக்கிறதே?

**காவியா — யாழ்ப்பாணம்**

**கொரோனா மீண்டும் தொடங்கி விட்டதாக பீதியைக் கிளப்புகிறார்களே உண்மையா வியாசரே?**

நாட்டில் தற்போது நாள் ஒன்றிற்கு ஐந்து பேர் வரை கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்படுகின்றனர்.
இது அளவில் குறைவு எனினும் இதன் விளைவு மிகவும் மோசமானதாக அமையலாம். இதில் பெரிதும் பாதிக்கப்படுவது வயதில் முதிர்ந்தவர்களே. நிச்சயம் அவர்கள் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும்.
வெளி இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கலாம். அவசரம் எனின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்லலாம்.
இல்லையேல் விளைவுகள் மிகப்பாரதூரமாக இருக்கும்.

**நிவேதன் — மந்துவில்**

**உலக அழிவு ஆரம்பித்து விட்டது போலத் தெரிகிறதே வியாசரே?**

மனித மிருகங்கள் உலகில் அதிகரித்து விட்டன. பணம், பதவி, புகழ் எனும் மூதேவிகள் மனிதனைப் பற்றிப்பிடித்து விட்டன. இதில் நீ பெரிது நான் பெரிது என்று அடிபிடி பட்டுக்கொண்டிருக்கும் மனிதனிடம் மனிதாபிமானம் இருக்கும் என்பதில் உண்மை இல்லை.
பணம், பதவி, புகழ் மோகத்திற்காக பெற்றோர்களை இல்லங்களில் தவிக்க விடும் கலாசாரம் தற்போது மேலோங்கி இருக்கிறது.
இது உலக அழிவின் ஆரம்பமே. இப்போது ஆரம்பம் மாத்திரமே. இதன் தாக்கம் இன்னும் இருக்கிறது.

**சிவம் — வதிரி**

**மேடை நாடகங்களின் செயற்றிறன் குறைந்து விட்டதே வியாசரே. அதை மீட்க வழியுண்டோ?**

நாடகத்திற்கு ஆற்றுகை என்று ஒரு பெயரும் உண்டு.
அதில் இரண்டு பொருள் உண்டு. அதாவது ஆற்றுதல் செய்து காட்டல் என்பதும் பார்வையாளர்களை ஆற்றுப்படுத்தல் என்பதுமாகும். மேடை நாடகங்கள் ஒரு காலத்தில் மிக உன்னத, உச்ச நிலையில் இருந்தன. அதைத் தொலைக்காட்சி வந்து விழுங்கி விட்டது.
அத்தோடு அந்த மகோன்னத கலை அழிவடையத் தொடங்கி விட்டது.
இப்போது என்ஜியோவில் புறப்போசல் எழுதுவதற்குத் தான் நாடகம் பயன்படுத்தப்படுகிறது. எல்லாம் விதி.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**076 097 3126**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தக்ஷித் — மானிப்பாய்**


**நல்லது கெட்டது எது என்பதை பிள்ளைகளுக்கு சொல்லி வளர்க்கும் பெற்றோர் அருகிவிட்டனரே?**

பிள்ளைகளுக்கு தனி அறை கொடுக்கும் கலாசாரம் என்று எம்மைத் தொற்றிக் கொண்டதோ அன்று எம் சமூகம் சீரழியத் தொடங்கி விட்டது.
எப்பொழுதும் பிள்ளைகள் பெற்றோர்களின் பார்வையின் கீழ் இருக்க வேண்டும்.
நல்லது எது கெட்டது எது என்பதை அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். வேலை வேலை என பிள்ளைகளிடம் தொலைபேசியைக் கொடுத்து விட்டு நாம் அலைந்தால் பிள்ளைகள் சீரழியாமல் என்ன செய்வார்கள்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**தையிட்டியில் தனியார் காணியில் விகாரை அமைக்கும் பணி மிகத் தீவிரமாக நடக்கிறதே?**

இது சிங்கள-பௌத்த நாடு. இங்கு ஆட்சி உரிமை அனைத்தும் பெரும்பான்மை சிங்களவருக்குரியது.
தமிழர்கள் பயங்கரவாதிகள். உங்களைத் தான் நாம் முள்ளிவாய்க்காலில் வைத்து அழித்து விட்டோமே. இனி நீங்கள் எதுவும் பேசக் கூடாது. நாம் என்னவும் செய்வோம். எதுவும் செய்வோம். நீங்கள் கம்மென்று இருந்தால் உங்களுக்கு நல்லது.



மேடை நாடகங்களின் செயல்திறன் குறைந்து விட்டதே வியாசரே. அதை மீட்க வழியுண்டோ?

**சுதன் — குப்பிழான்**

**அத்துமீறல்கள் எவையும் ஜனாதிபதிக்குத் தெரியாது போல பேசப்படுகிறதே?**

உரிய அனுமதிகள் பெற்றுக் கொள்ளாமல் மத சின்னங்களைப் பிரதிஷ்டை செய்ய முடியாது என ஜனாதிபதி கூறிய அடுத்த வாரமே வெடுக்குநாறி ஆதிசிவனாலயம் உடைக்கப்பட்டது.
தையிட்டியில் தனியார் காணியில் யாழ்ப்பாணத்தின் மிக உயரமான பௌத்த விகாரை நிர்மாணிக்கப்படுகிறது.
தமிழர்களின் பூர்வீகங்கள் அழிக்கப்பட்டு அதில் பௌத்த சின்னங்கள் பொறிக்கப்படுகின்றன.
இவற்றை எல்லாம் தெரியாது எனக் கூறி விடுவது சாதாரணமானதல்லவே.

**மதுவன் — மீசாலை**

**மாட்டு வண்டி சவாரிப் போட்டியில் மாடுகளைச் சித்திரவதை செய்கிறார்களே ?**

மாடு தமிழரின் வாழ்வியல், பண்பாடு, கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்த ஒன்று. அதில் ஓர் அங்கமே மாட்டுவண்டி சவாரிப் போட்டி.
தமிழனின் வீர விளையாட்டுக்களில் இதுவும் ஒன்று.
போட்டிகளில் வெல்வதற்காக சாட்டை அடிகள் வீழ்ந்தாலும் அவற்றில் அதீத பாசம் கொண்டு அவற்றைப் பராமரிப்பதில் இருந்து அதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்வது வரை பார்த்துப் பார்த்துச் செய்வார்கள் அதன் உரிமையாளர்கள்.
மாட்டு வண்டிச் சவாரிப்போட்டிகளிற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாலும் தமிழரின் மரபுகளைப் பாதுகாப்பதில் நாம் கவனம் செலுத்தியே ஆக வேண்டும்.

**தருஷ் — வதிரி**

**முடிந்த மேதின ஊர்வலங்களில் தொழிலாளர்கள் எவரும் பங்கு கொண்டது போல தெரியவில்லையே?**

தொழிலாளர் தினத்தை தொழிலாளிகள் கொண்டாடி பல வருடங்கள் ஆகிவிட்டன. இப்போது தொழிலாளர் தினம் கொண்டாடுபவர்கள் யார் தெரியுமா? முதலாளிகளும் அரசியல்வாதிகளுமே.
மே தினத்தன்று தொழிலாளி அன்றாட கூலிக்காக மாரடித்து வியர்வை சிந்துகின்றான் இங்கு.
அங்கோ உழைக்கும் கரங்களைப் பலப்படுத்துவோம் என வீர முழக்கமிட்டு ஊர்தி பவனியில் செல்கின்றார்கள் முதலாளிகளும் அரசியல்வாதிகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பாசமலர்
பாடியவர் : TM சௌந்தர்ராஜன், P.சுசீலா
இசை: ராமமூர்த்தி
இயற்றியவர்: கண்ணதாசன்



மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வண்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில் விளையாடி கொடியின் தலை சீவி நடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

மலர்ந்தும் மலராத பாதி மலர்
போல வளரும் விழி வண்ணமே
வண்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலையன்னமே
நதியில்விளையாடி கொடியின்தலை சீவிநடந்த
இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர்
கண்டு பொலிந்த தமிழ் மன்றமே

யானைப் படை கொண்டு சேனை பல வென்று
ஆளப் பிறந்தாயடா
புவி ஆளப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு
இளமை வழி கண்டுவாழப் பிறந்தாயடா
அத்தை மகளை மணம் கொண்டு...
இளமை வழி கண்டு... வாழப் பிறந்தாயடா

தங்கக் கடிகாரம் வைர மணியாரம்
தந்து மணம் பேசுவார்
பொருள் தந்து மணம் பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்..உலகை விலை பேசுவார்
மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக
உலகை விலை பேசுவார்

நதியில் விளையாடி கொடியின் தலை சீவி
நடந்த இளம்தென்றலே
வளர் பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

சிறகில் எனை மூடி அருமை மகள் போல
வளர்த்த கதை சொல்லவா
கனவில் நினையாத காலம் இடை வந்து பிரித்த
கதை சொல்லவா..
பிரித்த கதை சொல்லவா

கண்ணில் மணி போல மணியின் நிழல் போல
கலந்து பிறந்தோமடா
இந்த மண்ணும் கடல் வானும் மறைந்து
முடிந்தாலும் மறக்க முடியாதடா
உறவைப் பிரிக்க முடியாதடா
ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்ம்

அன்பே ஆரிராரோ ஆரிராரோ
ஆரிராராரிரோ
அன்பே ஆரிராரிரோ..அன்பே ஆரிராரிரோ

# பிரபலங்களின் உணவு முறை

பசி வந்திடப் பத்தும் பறந்துபோகும் என்பார்கள். ஆனால், பசி மறந்து சாப்பிட நேரமின்றி எந்நேரமும் இறக்கை கட்டிப் பறந்து கொண்டேயிருக்கும் உலகின் முதன்மைத் தொழிலதிபர்கள் தங்கள் உணவுமுறையில் செய்யும் சேட்டைகளில் சிலவற்றை இங்கே பார்க்கலாம்.

## 01 ஜெ:ப் பெசோஸ்

இ-காமர்ஸ் உள்ளிட்ட பல துறைகளில் உலக அளவில் கொடிகட்டிப் பறக்கும் அமேசானை நிறுவிய ஜாம்பவான். ஒரு நிறுவனத்துடனான சந்திப்பின்போது சாப்பிடுவதற்காக உருளைக்கிழங்கு, பன்றி இறைச்சி, பச்சைப் பூண்டு யோகர்ட், முட்டை (poached egg) என சாதாரணமாக ஆர்டர் செய்துகொண்டே வந்தவர் திடீரென இதுவரை அவர் சாப்பிடாத 'மத்திய தரைக்கடல் ஆக்டோபஸ் வேண்டும்' எனக் கேட்டுத் திகைக்க வைத்துள்ளார்.

## 01 மார்க்ஜூக்கர்பெர்க்

மெட்டா தலைமை நிர்வாக அதிகாரி பல்வேறு வகையான உணவு வகைகளையும் ருசி பார்த்துள்ளார். சில ஆண்டுகளுக்கு முன், தானே கொன்ற விலங்குகளின் இறைச்சியை மட்டுமே சாப்பிட வேண்டும் என்று தனக்குத் தானே ஒரு தனிப்பட்ட சவாலை விடுத்துள்ளார். கொல்லும் விலங்குகள் என ஆடு, பன்றி, கோழி, நண்டு ஆகியவற்றைச் சொல்கிறார். தான் கொன்றதைத் தான் மட்டும் உண்ணாமல் நண்பர்கள், விருந்தினர்களுடன் பகிர்ந்துகொள்கிறார்.

## 03 பில்கேட்ஸ்

மைக்ரோசாப்ட் நிறுவுனருக்கு அறிமுகமே தேவையில்லை. இளமையில் தனக்குப் பிடித்த டயட் கோக்கை ஒரு நாளுக்கு நான்கு டின்கள் குடித்துள்ளார். ஒரு முழு உணவகத்தையும் இரண்டு நாள்களுக்கு முன்பதிவு செய்து வெறும் டயட் கோக்கை மட்டுமே ஆர்டர் செய்து அருந்தியுள்ளார். சமீப காலங்களில் உணவை முற்றிலுமாகப் புறக்கணித்து காலை உணவாக கோக்கோ பப்ஸை சாப்பிடுகிறாராம். சீஸ் பர்கர் வெறியன் என்றும் இவரைச் சொல்லலாம்.

## 04 சாம் ஆல்ட்மேன்

தான் உருவாக்கிய ஓப்பன் ஏ.ஐ நிறுவனம் போலவே இவரும் பல பரபரப்புகளை ஏற்படுத்தக் கூடியவர்தான். சிறுவயதிலிருந்தே சைவ உணவு மட்டுமே உண்ட இவர், மெத்தில்பி-12, ஒமேகா-3, இரும்பு, விட்டமின் டி-3 ஆகிய சத்துகளை மாத்திரைகளாக உண்கிறார். சமீபத்தில், முதுமையைத் தள்ளிப் போடுவதற்காக நீரிழிவுக்கு எடுத்துக்கொள்ளும் ஒரு மருந்தையும் சேர்த்துவருகிறார். பயோ ஹேக்கர்களிடையே இந்த slow aging டெக்னிக் தற்போது பிரபலமாக இருக்கிறதாம்.


## 05 எலான் மஸ்க்

டுவிட்டர் புகழ் மஸ்க் என்றால் புரிந்து கொள்வீர்கள்தானே! காலை உணவைத் தவிர்ப்பது அல்லது எல்லா நாளும் டோனட் சாப்பிடுவது இவரது வழக்கம். மீட்டிங்கில் இருக்கும்போது தன் உதவியாளர் எதைக் கொண்டு வந்தாலும் கண்ணை மூடிக் கொண்டு ஐந்து நிமிடத்தில் உண்டுவிடுவாராம். ஒரு நாளுக்கு 8 கேன் என்கிற அளவில் டயட் கோக்குகளைக் குடித்துள்ளார். 'டயட் கோக் எனது ஆயுட்காலத்தைக் குறைத்தாலும் கவலைப்பட மாட்டேன்' என்று 2022-இல் டுவீட் செய்துள்ளார்.

## 06 வாரன் பஃபெட்

பங்குச்சந்தையின் தந்தை என்று அழைக்கப்படும் இவருடன் ஒரு வேளை உணவு உண்ணும் வாய்ப்பை ஏலம் விடுவது வழக்கம். இதன்மூலம் 53 மில்லியன் டாலர் சம்பாதித்துத் தொண்டு நிறுவனத்துக்குக் கொடுத்துள்ள இவர், அதிகமாக கொக்க கோலா குடிக்கிறார். உருளைக்கிழங்கு ஸ்டிக்ஸ் சாப்பிடும்போது, ஐஸ்கிரீம் சுவைக்கும்போது என எல்லாவற்றுக்கும் கோக்கைத் தொட்டுக்கொள்வார்போல. ஹாம்பர்கர் மற்றும் ஓரியோ உணவு














கள்ளயும் அதிகம் விரும்புகிறார் இந்த ஓல்டு யங் மேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடினை நெருங்கும் டிரோன்கள்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் ஓராண்டுக்கும் மேலாக ஓயாத போராக தொடர்ந்துகொண்டிருக்கும் நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடினை குறிவைத்து கிரெம்ளின் மாளிகையில் டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அந்த தாக்குதலை முறியடித்துவிட்டதாகவும் யார் உயிருக்கும் பொருளுக்கும் பாதிப்பில்லை என்றும் தெரிவித்திருக்கும் ரஷ்யா இந்த சதி தாக்குதலுக்கு உக்ரைன்தான் காரணம் என பகிரங்கமாக குற்றம் சாட்டியிருக்கிறது.

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் உள்ள கிரெம்ளின் மாளிகையில் தான் ஜனாதிபதி புடினின் அதிகாரப்பூர்வ இல்லம் அமைந்திருக்கிறது. இந்தநிலையில், கடந்த புதன்கிழமை நள்ளிரவில் இரண்டு டிரோன்கள் ஜனாதிபதி புடின் வசிக்கும் கிரெம்ளின் மாளிகையை நோக்கி பறந்துவரவும், அந்த இரண்டு டிரோன்களையும் ரஷ்யாவின் மின்னணு ரேடர்கள் சுட்டு வீழ்த்திருக்கின்றன. சுட்டு வீழ்த்தப்பட்ட டிரோன் பாகங்கள் மட்டும் எரிந்தநிலையில் கிரெம்ளின் மாளிகையின் வளாகத்துக்குள் நொறுங்கி விழுந்திருக்கின்றன. இந்த காட்சிகள்தான் தற்போது ஊடகங்கள் மற்றும் சமூக வலைதள்ங்களில் வெளியாகித் தீவிரமாகப் பரவிவருகின்றன. இந்த நிலையில், இந்த தாக்குதல் சம்பவத்துக்குப் பின்னணில் உக்ரைன்தான் இருக்கிறது எனவும் ரஷ்யா தக்க நேரத்தில் பதிலடி கொடுக்கும் எனவும் கிரெம்ளின் மாளிகை தெரிவித்திருக்கிறது.

இந்த தாக்குதல் குறித்து கிரெம்ளின் மாளிகை வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பில், "அன்றிரவு இரண்டு ஆளில்லா வான்வழி (டிரோன்) சாதனங்கள் கிரெம்ளினை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த முயன்றன. எங்கள் இராணுவம் அதை மின்ன்ணு ரேடர் போர் அமைப்புகளைப் பயன்படுத்தி சரியான நேரத்தில் சுட்டுவீழ்த்தியது. துரித நடவடிக்கைகளின் விளைவாக டிரோன் தாக்குதல் முறியடிக்கப்பட்டன. இந்த தாக்குதலை நாங்கள் திட்டமிட்ட பயங்கரவாத செயலாகக் கருதுகிறோம்" எனத் தெரிவித்திருக்கிறது.

### நேரம் வரும்போது பதிலடி:

மேலும் அந்த அறிக்கையில், "இந்த திட்டமிட்ட பயங்கரவாத நடவடிக்கை, மே 9ஆம் தேதி நடைபெறவிருக்கும் ரஷ்யாவின் வெற்றி தின விழாவை சீர்குலைக்கும் விதமாகவும், அந்தநாளில் நடைபெரும் அணிவகுப்பில் வெளிநாட்டு விருந்தினர்கள் பலர் கலந்துகொள்ள விருக்கும் நிலையில், அணிவகுப்புக்கு முன்னதாக ஜனாதிபதியை படுகொலைசெய்யும் முயற்சியாகவும் நாங்கள் கருதுகிறோம்!

இந்த தாக்குதலுக்கு பதிலடிகொடுக்க எங்களுக்கு உரிமை இருக்கிறது. எங்கு எப்போது என நேரம் வரும்போது பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்!" என உக்ரைனை அச்சுறுத்தும் அறிவிப்பை ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகை வெளியிட்டிருக்கிறது.

ரஷ்ய ஊடகங்கள் வெளியிட்டிருக்கும் செய்தியில், 'டிரோன் தாக்குதல் நடந்த நேரத்தில் புடின் கிரெம்ளின் மாளிகையில் இல்லை என்றும், மாஸ்கோவின் புறநகரில் இருக்கும் நோவோ ஓகாரியோவோ இல்லத்தில் இருந்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்தநிலையில், தலைநகரின் பாதுகாப்பை வலுப்படுத்தும் விதமாக மாஸ்கோ நகர மேயர் செர்கே சோபியானின், நகரத்தின் வான் வெளியில் டிரோன்கள் பறப்பதற்கு தடை விதித்து உத்தரவிட்டிருக்கிறார். மேலும், அரசாங்கத்திடம் சிறப்பு அனுமதி பெற்ற பின்னரே டிரோன்கள் பறக்கவிடமுடியும் எனவும் அறிவித்திருக்கிறார். மாஸ்கோ மட்டுமல்லாமல் மே 9 வெற்றிவிழா நடைபெறும் ரஷ்ய நகரங்கள் அனைத்திலும் பாதுகாப்பு நடவடிக்கை பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

### உக்ரைன் மறுப்பு:

டிரோன் தாக்குதலுக்கு உக்ரைன்தான் காரணம் என ரஷ்யா குற்றச் சாட்டியிருக்கும் நிலையில், உக்ரைன் அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கிறது. இதுகுறித்து விளக்கம் அளித்திருக்கும் உக்ரைன் ஜனாதிபதி செய்தி தொடர்பாளர் மிகாய்லோ போடோல்யாக், "கிரெம்ளின் மாளிகை மீது நடத்தப்பட்ட ஆளில்லா டிரோன் தர்க்குதலுக்கும், உக்ரைன் நாட்டுக்கும் எந்த சமபந்தமும் இல்லை கிரெம்ளின் மாளிகையை தாக்குவதன் மூலம் இராணுவ பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது என்பது உக்ரைனுக்குத் தெரியும்" என கூறியிருக்கிறார்.





புகழ்பெற்ற சங்கீதமேதை மொசார்ட்டை சந்தித்த இளைஞன் ஒருவன், "ஐயா, சிறந்த பாடல்களை இயற்றுவது எப்படி?" என்று கேட்டான்.

"நீ வயதில் இளையவன். முதலில் எளிய பாடல்களை இயற்றிப்பார்" என்றார் மொசார்ட்.

"நீங்கள் மட்டும் 10 வயதிலேயே சிறந்த பாடல்களை இயற்ற வில்லையா?" என்று கேட்டான் இளைஞன்.

அதற்கு மொசார்ட், "அது சரி... ஆனால், எப்படிப் பாடல்களை இயற்றுவது என்று நான் எவரையும் கேட்டுக்கொண்டிருக்கவில்லையே!" என்று புன்னகையுடன் பதில் தந்தாராம்.

ஆம்! வெற்றியாளர்கள் எப்போதும் எவரின் உதவிக்காகவும் காத்திருப்பதில்லை. குறிப்பிட்ட க்காலத்துக்குள் நம் இலக்கை நாம் அடையவேண்டும் எனில், நம்முடைய முயற்சிகளுக்கு எவரேனும் வழிகாட்டுவார்கள், துணைபுரிவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சரியான தருணத்தில் காரியத்தில் கால் பதிப்பது அவசியம்.

சிக்கலான தருணங்களைச் சாமர்த்தியமாக எதிர்கொள்வதும் சமாளிப்பதும் முக்கியமான அம்சமாகும்.

வளர்ந்துவரும் சோப்புக் கம்பெனி அது. அதன் உற்பத்தித் தொழிற் சாலையில், சோப்புக்கட்டிகளைத் தானியங்கியாகவே கவரில் சுற்றி பேக் செய்து, பெட்டிகளில் நிரப்புகிற வேலையைச் செய்ய இயந்திரம் உண்டு. அதாவது, சோப்புக்கட்டிகள் ஓரிடத்தில் விழும். அங்கே அது ஒரு கவரில் சுற்றப்படும். பின்னர் கவர் செய்யப்பட்ட சோப்புக்கட்டிகள் வரிசையாக கன்வேயர் பெல்ட்டில் கொண்டுசெல்லப்பட்டு, குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட எண்ணிக்கையில் அட்டைப்பெட்டிக்குள் அடுக்கப்படும்.

இந்த நிலையில், குறிப்பிட்ட இயந்திரத்தில் கோளாறு. இடையிடையே சில கவர்கள் சோப்புக்கட்டி இல்லாமலே அழகாகச் சுற்றப்பட்டு பேக் ஆகி, அட்டைப் பெட்டிக்குள் அடுக்கப்பட்டன. ஆரம்பத்தில் இந்த நிலைமையை

# வெற்றியின் இரகசியம்

எவரும் ஆராயவில்லை. ஆனால், முகவர்கள் மற்றும் கடைக்காரர்கள் சோப் இல்லாத வெறும் கவர் வந்து சேர்வதைச் சுட்டிக்காட்டிய பிறகே நிர்வாகத்துக்குத் தெரியவந்தது.

ஆலோசனைக் கூட்டம் நடந்தது. அனைத்துக் கவர்களும் சோப்புக் கட்டிகளுடன் பேக் செய்யப்படுகிறதா என்பதை அறிய ஒரு ஸ்கேனிங் மெஷின் வாங்கலாம் என்று முடிவெடுத்தார்கள். ஆனால், பொருளாதாரச் சூழல், அதையும் தாண்டி ஸ்கேனிங் மெஷின் ஆர்டர் கொடுத்து வந்து சேர்வதற்கு ஆகும் கால அவகாசம் ஆகிய விடயங்கள் அவர்களை யோசிக்க வைத்தன. அதுவரை உற்பத்தியை நிறுத்திவைக்க முடியாதே!

உறுதியான முடிவெடுக்க இயலாமல் அவர்கள் தவித்தவேளையில், புதிதாகப் பணிக்குச் சேர்ந்த இளைஞன் ஒருவன் எழுந்து தனது திட்டத்தைக் கூறினான். அங்கிருந்த எல்லோரும் கரகோஷம் எழுப்பி, அதை ஏற்றுக் கொண்டார்கள்.

அவன் கூறிய திட்டம் இதுதான்... ஒரு பெரிய பெட்ஸ்டல் ஃபேன் வாங்கப்பட்டது. கன்வேயர் பெல்ட்டின் இறுதி முனைக்கு அருகில் அதை நிறுவினார்கள். அதை ஆன் செய்ததும் காற்றடிக்கத் தொடங்க, காலியான கவர்களெல்லாம் பறந்துபோயின. சோப்பு உள்ள கவர்கள் மட்டும் அட்டைப் பெட்டிக்குள் சேகரமாயின.

இப்படித்தான், சிக்கலான தருணங்களில் வட்டத்துக்கு வெளியே சிந்தித்தலும் சாமர்த்தியச் செயல்பாடுகளும் வேண்டும்.

எதை எதையோ மனதில் ஏற்றிவைத்துக் குழம்பிக்கொண்டிருப்போம். அது தவறு. அப்படியான எண்ணக் குழப்பங்கள், நம்மை திசைதிருப்பி அலைக் கழிக்கும்.

ஞானி ஒருவரிடம் அவரின் சீடன், "குருவே... நீங்கள் இன்பத்தில் மகிழ்ச்சியோ, துன்பத்தில் சோர்வோ அடைவதில்லை. இரண்டையும் சமமாக பாவிக்கும் பண்பு, உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான்.

"கழுதையிடமிருந்துதான்" என்றார் ஞானி. "என்னது, கழுதையிடம் இருந்தா?" என்று சீடர்கள் வியந்தனர். காலையில் அழுக்கு உடைகளைச் சுமந்து செல்லும் கழுதை அதற்காக வருத்தம் கொள்வதில்லை. மாலையில் வெளுத்த துணிகளைச் சுமந்தபடி திரும்பும். அப்போதும் அது, 'தூய்மையான துணிகளைச் சுமந்து வருகிறோம்' என்று மகிழ்ச்சி அடைவதில்லை. இதைப் பார்த்துதான், இத்தகைய ஒரு பண்பை நான் கற்றுக்கொண்டேன்!" என்றார் அந்த ஞானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டவனே அறிவான்

காலம் காத்திராது கடந்து சென்றது -நாட்டில்
கோலம் மாறியது கொள்கையும் மாறியது

கொறோனா வந்து நீதானது பொருளாதாரம்
தேறுவது கடினமென தென்பட்டது உலகுக்கு

பொருட்களுக்குத் தட்டுப்பாடு பெரிதாய் வந்தது
பொருட்காட்சிப் பொருளானது பெற்றோலும் டீசலும்

விலைகள் ஏறியதால் விறைத்தனர் மக்கள்
நிலையான பொருளாதாரம் தலை சாய்ந்தது

மக்கள் போராட்டம் மண்ணில் தோன்றியது
கக்கும் நீருடன் கண்ணீர்க்குண்டு

தலைகள் நாட்டை விட்டு தப்பி ஓட்டம்
தலைகளின் வாள்கள் தத்தளித்தன நாட்டில்

புதிய தலைமுறை பொறுப்பு எடுத்தது
விதி மாறி விடுதலை கண்டனர்

விடுதலை பெற்று வெளியே வந்தான்
அடுத்தது என்ன ஆண்டவன்தான் சொல்ல வேண்டும்.



சிவா, தும்பளை, பருத்தித்துறை.

## மேன்மை மிகு மே தினம்



வலியவரே வாழும் பூமி
நலிந்தவரை நசுக்கையிலே
மெலிந்தவர்கள் அணிதிரண்டு
மேன்மைகள் பெற்ற தினம்!

பதினெட்டு மணி நேரம்
பயனற்று உழைத்தவர்கள்
சிந்திய ரத்தத்தால்
சிக்காக்கோ சிவந்த தினம்!

சலுகைகளைக் காட்டியே
சரிக்கட்ட நினைப்பவரை
உரிமைத் தீ உணர்வு பொங்க
எரிமலையாய் எதிர்த்த தினம்!

தியாகங்கள் செய்தாலே
தீர்வுகள் வருமென்ற
தத்துவ போதனையை
தமிழர்க்குத் தந்த தினம்...!

இரா.ஜெயக்குமார்.



## பொம்மைக் கல்யாணம்

பொம்மைக் கல்யாணம் -தினம்
பொம்மைக் கல்யாணம்
தம்மையே அலங்கரித்து
மாலை மாற்றி கொண்டாடும்
(பொம்மை...)

தம்மையே தாம் மறந்து
பாலகர்கள் ஒன்றுகூடி
மேளங்கொட்டி ஆர்ப்பரித்து
மணமக்கள் போலிருக்கும்
(பொம்மை...)

மணமக்கள் வேடமிட்டு
மணமேடை மீதிருந்து
வணங்கி விடை கொடுக்கும்
பொம்மைக் கல்யாணம்
(பொம்மை...)

இனிப்பு வகைகள் பரிமாறி - நல்ல
இனிய வாழ்த்துக் கூறி
அனைவருக்கும் விருந்து வைத்து
மணமக்கள் நன்றி கூறும்
(பொம்மைக் கல்யாணம்...)

சி.சிவானந்தராசா.

## மௌனத்தின் தேடல்- 667



## நல்ல பிள்ளைகளை நம்பி

இயற்கை அன்னையின்
இதயம் போன்றும்
தொல்லை தராதவையும்
முல்லை வனங்கள்
எண்ணங்களுக்கு ஏற்ப
சின்னங்களைத் தெரிந்தாலும்
நாட்டு நடப்பை
காட்டுடன் கலப்பதற்கு
சிங்கம் புலிகள் கடும்
சீற்றத்தை வெளிப்படுத்தின.

க.நாகராசா, நுணாவில்.

## மௌனத்தின் தேடல்- 668



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வீரச் சண்டை

சிங்கம் கர்ச்சிக்க புலி உறுமியது
ஏன் என்று தெரிகிறதா என்னவென்று புரிகிறதா
சிங்கத்தின் கர்ச்சிப்புக்குள்ளே பல கற்பனைகள்
நான் தான் வீரன் என்ற ஆணவம் தான்
உறுமல் ஓசை கொண்ட புலி
பதுங்குவது பாய்வதற்குத் தான்
இரு துருவங்கள் ஒரே நேர்கோட்டில் மோதி
யார் வீரன் என வீரச்சண்டை புரிகிறது.

கும்பவாழியான், உடுப்பிட்டி.

## சிங்கராஜாவே...!

மோதல் தரும் சாவுதனை
முடிவில் கண்டு வருந்தாதே
ராஜா நீயென்றாலும்
ராஜ்ஜியம் எமக்கானதே
காடு உன் கல்யாணச் சொத்தல்ல
கருங்குரங்கும்-கரடி,புலி, யானையும்
கண்ணியம் காத்திடும் கூடிது மறவாதே
ஒன்றிணைந்த பலமே
உயர்ச்சியின் உச்சம்
பணிந்து வா புலியோடு பழகு
பலத்தை அதிகரித்து
பாரினை வெல்வோம்.

விநோதராஜ் விஜுஜா,
இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம்.

## புலிகளின் எச்சரிக்கை

கூட்டு வாழ்வுக் கூடாரத்தில்
காட்டு ராஜாவைக் கைதொழுவோம் - சிங்கமே
பதுங்கியிருக்கும் எம்மினத்தை
பரிசோதனை செய்ய முயலாதே
ஆட்சிக் கர்வம், அடக்குமுறை,
அதிகார வெறி நீளுமாயின்
தாக்கி உமைக் கொல்லும்
தண்டனை தரவும் அஞ்சோம்.

சாந்தையூர் விஸிஸ், பண்டத்தரிப்பு.

## தலைவர்

வீட்டுக்கு ஒரு தலைவர்
நாட்டுக்கு ஒரு தலைவர்
அதுபோல்
காட்டுக்கும் அமைந்தாலே
முழு அகிலமும் அமைதி பெறும்.

திருமதி.ஜெ.விஜயநிர்மலா,
சங்கத்தானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 60

# கடல்புறா

## அவள் அறிந்த இரகசியம்

அவள் முகத்தில் வெட்கமும் கோபமும் கலந்து தாண்டவமாடினாலும் வெட்கத்தை விடக் கோபமே மேலெழுந்து நின்றதால் அவள் செவ்வரிக் கண்கள் அதிகமாகச் சிவந்து அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் மீது கனலைக் கக்கின.

எழுந்து திரும்பிய அவள் தனது ஆசனத்தின் முகப்பைக் கைகளால் பிடித்துக் கொண்டும், பின் பக்கம் உணவுக் கலங்கள் வைக்கப்பட்டிருந்த ஆசனத்தின் முகப்பில் சற்றே வளைந்து சாய்ந்து கொண்டும் குற்றவாளியை விசாரிக்க முயலும் பெரிய ராணிபோல் பலவர்மனைச் சுடும் விழிகளால் நோக்கியதன்றி, "என்ன சொன்னீர்கள்?" என்று சீற்றத்துடன் கேட்கவும் செய்தாள்.

அவள் சீற்றத்துக்குக் காரணம், தான் உண்மையை உணர்ந்து கொண்டு விட்டதேயொழிய வேறில்லையென்பதை அறிந்து கொண்டாலும், தன் ஏற்பாடு பயனுற வேண்டுமானல் தான் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்ட பலவர்மன், தனது சிரிப்பைச் சட்டென்று அடக்கிக் கொண்டு அந்தச் சீறும் விழிகளின் மீது அன்பெல்லாம் அள்ளிக்கொட்டிய பார்வையொன்றை வீசினான்.

அதைத் தொடர்ந்து உதிர்ந்த அவன் வார்த்தைகளிலும் அன்பு பூரணமாகத் தொனித்து. "தவறாக ஏதும் சொல்லவில்லை, மகளே! உன் உள்ளத்தில் உள்ளதைத் தானே சொன்னேன்?" என்றான் பலவர்மன் அன்பு ததும்பும் குரலில்.

அவனது அன்பான பார்வை, பார்வையைத் தொடர்ந்து வெளிப்போந்த சொற்கள், சொற்களைத் தழுவிய மதுரமான குரல், இவற்றின் விளைவாகச் சீற்றத்தை ஓரளவு தணித்துக் கொண்ட மஞ்சளழகி, வெறுப்பும் இகழ்ச்சியும் மண்டிய குரலில் கேட்டாள், "என் உள்ளத்தையும் அத்தனை எளிதில் புரிந்து கொண்டு விட்டீர்களாக்கும்?" என்று.

"ஆம்" சர்வ சாதாரணமாகப் பதிலிறுத்தான் பலவர்மன்.

"பெண் உள்ளத்தைப் புரிந்து கொள்வது மிகக் கடினம் என்பது ஆன்றோர் கருத்து." என்று சுட்டிக் காட்டினாள் அவள்.

"அதற்கு விலக்கு மூன்று பேர்" என்றான் பலவர்மன்.

"யார் அந்த மூன்று பேர்?"

"தாய், காதலன், தோழி"

"அந்த மூவரில் நீங்கள் யாருமில்லை."

இல்லைதான் ஆனால் தாயின் பதவியை வகித்திருக்கிறேன். நீ என் கரங்களில் வளர்ந்தவள், தரையில் நீந்தி, தவழ்ந்து, தளர்நடை புரிந்த திலிருந்து இன்றுவரை என் கவனத்திலிருந்து நீ விலகவில்லை."

இந்த வார்த்தைகளைப் பலவர்மன் சொன்னபோது அவன் நா தழுதழுத்தது. குரல்கூடச் சற்றுக் கம்மியது. அப்படி அவன் தன் விஷயத்தில் உணர்ச்சிக்கு இடங் கொடுத்ததை அவள் அன்றுவரை பார்த்தில்லை. அன்று நடந்த எல்லாமே புதிதாயிருந்தது அவளுக்கு. எதற்கும் உணர்ச்சி வசப்படாத தந்தை உணர்ச்சி வசப்பட்டது அவளுக்குப் புதிதாயிருந்து. வேடிக்கைக்குக்கூட விகல்பமாகப் பேசாத பலவர்மன், தன்னையும் இளையபல்லவனையும் இணைத்துப் பேசிய தன்றி, "உன் மனச் சாம்ராஜ்யத்தின் மன்னர்" என்று இளையபல்லவனைச் சுட்டிக்காட்டியதும் பெரும் வினோதமாயிருந்தது மஞ்சளழகிக்கு.

எந்தக் காரணத்தால் தந்தை அப்படித் திடீரென்று மாறி விட்டார் என்று திகைத் தாள் அவள். ஒரு தந்தை நேரிடையாகத் தனது மகளிடம் விவாதிக்கத் தகாத விடயங்களைத் தனது தந்தை அவ்வாறு விவாதித்ததும் பெரும் விசித்திரமாயிருந்தது அவளுக்கு.

(தொடரும்...)

---

## நான் வைரமுத்து பேசுகிறேன்... 06

# எழுத்தும் - எழுத்தாளரும்

"இந்த வேளையில் தமிழ் இலக்கிய உலகினை எப்படித் தரிசிக்கிறோம்?

பெண்களைக் கவர்ச்சிப் பொருளாக்கி மேலட்டைகளை மினுக்கியபடி பத்திரிகைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன.

வெறும் வார்த்தை ஜாலங்கள் "தாம் தூம் என்று குதித்து வந்து தாங்கள் தாம் புதுக் கவிதைகள் பறைசாற்று கின்றன.



எதுகை மோனைகளில் அந்தர்ப்பல்டி அடித்துத் தனி மனிதர் துதிபாடி வெட்டிப் பேச்சுகளும், புராண புளுகாராய்ச்சிகளும், பட்டி மன்றங்களும், மதியச் சாப்பாட்டிற்குப் பின்னாலான அரைத் தூக்க ஆராய்ச்சிகளும் கலை இலக்கியக் கொடி ஏற்றி அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

வாழ்க்கை மேல் நம்பிக்கை ஊட்டாத காம விகார ஒப்பாரிப் பாடல்களே திரைப்பட இசை வடிவம் பெற்றுப் பட்டி தொட்டிகளெல்லாம் முழுங்குகின்றன.

பணம் படைத்தோரின் பொழுது போக்குக்காக சபாக்காரர்களின் வியாபார இலாபத்திற்காக நகைச் சுவைத் துணுக்குகளை நெடுகப் பரப்பி வாழ்க்கைப் பிரச்சினைகளை அப்புறப்படுத்தி விட்டு நாடகங்கள் மேடையேறுகின்றன."

அந்த முன்னுரை அப்படி முன் மொழிகிறது.

இந்த ஆழ்ந்த கவலையைப் பங்கிட்டுக் கொள்வதும், பரிகாரம் காண்பதும் இளம் எழுத்தாளர்களின் கடமையாயிருக்கிறது.

அவனவன் தனித் தனியாகக் கோபப்பட்டுக் கொள்வதும் தானே தனக்குத் தண்ணீர் ஊற்றிக் கொள்வது மாயிருப்பதால், இங்கே ஒட்டு மொத்தமான ஒரு கருத்து உருவாக மறுக்கிறது.

இங்கே வெளிப்படுத்துவதற்குச் சாதனமோ நெறிப்படுத்துவதற்கு இயக்கமோ இல்லாமல் சின்னச் சின்ன எரிமலைகள் மண்ணுக்குள்ளேயே தற்கொலை செய்து கொள்கின்றன.

இங்கே சில தனிமனிதர்கள் தம் பிம்பங்களைப் பெரிதாக்கி கொள்வதற்கே இலக்கிய அமைப்புகள் ஏற்படுத்துகிறார்கள்.

நோக்கங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளாத சுயத்தில் சுத்தமில்லாத எந்த அமைப்பும் சிறகு விரிக்கலாம் பறக்க முடியாது.

ஆழ்ந்த கல்வியின்மையால் இளம் எழுத்தாளர்களில் சிலரும், கவிஞர்களில் சிலரும் கூட வாக்காளர்களைப் போல் ஆகிவிடுகிறார்கள்.

நிகழ்காலத்திலிருந்து தன்னைத் துண்டித்துக் கொள்ளும் வெறும் சௌந்தர்ய உபாசகன் எவனும் இனி இலக்கியப் பயணத்திற்குப் பயன்பட மாட்டான்.

உரைநடை எழுதுகிறவன் எழுத்தாளன்; கவிதை எழுதுகிறவன் கவிஞன் என்ற எல்லைக் கோடு இப்போது இருக்கிறது.

உரைநடைக்கும், கவிதைக்குமான சுவர் இடியத் தொடங்கும்போது எழுத்தாளனுக்கும் கவிஞனுக்குமான எல்லைக் கோடும் அழிந்துவிடும்.'

அந்தச் சுவரை இடிப்பதையும், எல்லைக்கோட்டை அழிப்பதையும் விஞ்ஞானம் வேகமாய்ச் செய்யும் போலிருக்கிறது. நாம்கவலைப்படுகிறோம் ஆனால், கட்டுப்பட்டாக வேண்டிய உண்மை இது.

நம் இளம் கவிஞர்கள் ஒன்றைப் படைத்துக் காட்டுவதற்கு மாறாய் ஒன்றைப் போல் படைத்துக் காட்டுவதிலேயே தங்களின் சேமித்த சக்தியைச் செலவழிக்கிறார்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

341

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# இலங்கைத் தமிழரிடையே நீரிழிவு ஏற்படும் சதவீதம் அதிகம்

உலகளாவிய ரீதியில் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் பல்கிப் பெருகி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இலங்கை போன்ற வளர்முகநாடுகளிலும் சிறிது சிறிதாக இவற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி கொழும்பு நகரப்பகுதியில் ஏறக்குறைய 23 சதவீதத்தினர் நீரிழிவு அல்லது நீரிழிவுக்கு முந்தைய நிலையினால் **(Pre Diabetes)** பாதிக்கப்பட்டுள்ளனர். இனங்களை ஒப்பிடுகையில் இலங்கைத் தமிழரிடையே நீரிழிவு ஏற்படும் சதவீதம் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எமது மக்களிடையே சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையானது அதிகமாக இருப்பதும் இதற்கானதொரு காரணமாகும். இதேபோல அதிகரித்துவரும் மேற்கத்தைய துரித (Fast Food) உணவுகளின் பயன்பாடும் இதற்கு முக்கிய காரணமாகும். உடற்பயிற்சியற்ற **(Sedentary)** வாழ்க்கை முறையும் கூட இதற்கு ஏதுவாக அமைகின்றது.

இவ்வாறான தவறான உணவுப் பழக்கங்களால் நீரிழிவு ஏற்படும் போது அதனால் பலவகையான நீண்ட காலப் பிரச்சினைகள் (Complications) ஏற்பட நேரிடலாம். கண் குருடாதல், சிறுநீரக செயலிழப்பு நரம்புகளில் ஏற்படும் தாக்கம் மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் போன்றவை இதற்கு உதாரணங்களாகும்.

எமது மக்களிடையே தாகம் ஏற்படும் போது அருந்தும் பானமாக "சோடா" எனப்படுகின்ற மென்பானங்கள் அமைந்திருப்பது மிகவும் துர்ப்பாக்கியமான விடயமாகும். நாம் தேநீர் மற்றும் பழச்சாறு என்பவற்றுக்கு நேரடியான முறையிலும் அதே போல பல்வேறுபட்ட மறைமுகமான வழிகளிலும் சீனியைப் பயன்படுத்தி வருகின்றோம். மென் பானங்கள் ஐஸ்கிறீம், கேக் மற்றும் இனிப் பூட்டிய பிஸ்கற் சொக்கலேட் என்பவற்றில் மிகவும் அதிகமான அளவில் சீனிச்சத்து இருக்கிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் படி ஒரு வருடத்தில் இலங்கையரொருவர் உள்ளெடுக்கும் சீனியின் அளவு ஏறக்குறைய 30 கிலோகிராம் ஆகும். எமது விழாக்கள் மற்றும் சடங்குகளில் கூட சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுப் பண்டங்களின் அளவு மிக அதிகமாக இருத்தலைக் காணக் கூடியதாக இருக்கின்றது.



எமது மண்ணிலே மூலைக்கு மூலை புதிது புதிதாக முளைக்கின்ற ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான நிலையங்களும் இவ்வாறான சீனிப்பாவனை அதிகரித்துச் செல்வதற்குக் காரணமாகும்.

சுகாதார அமைச்சானது மிக அண்மையில் குளிர்பானங்களுக்கு வர்ணக் குறியீட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி பச்சை (மிகக் குறைந்த சீனியளவு) மஞ்சள் (இடைப்பட்ட அளவு) சிவப்பு (மிக அதிகளவு) ஆகிய நிறக் குறியீடுகளை மென்பானங்களில் நாம் பார்க்க முடியும்.

**தீர்வுகள்**

01.சிறுவர்களுக்கு ஆரம்பகாலத்திலிருந்தே அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையால் ஏற்படும் தீமைகளை எடுத்துரைத்தல் அவசியமாகும். இவ்வாறான பாவனையால் நீண்டகால அடிப்படையில் ஏற்படும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்களின் தாக்கத்தை எடுத்துரைப்பது அவசியமாகும்.

02.பொது மக்கள் மத்தியில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகளை விரிவாக எடுத்துக் கூறுவது இன்றியமையாததாகும். இதற்குப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மற்றும் இணையங்கள் போன்றவை உதவமுடியும்.

03.பாடசாலை உணவகங்களில் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துள்ள உணவுகளையும் துரித உணவுகளையும் தடை செய்து ஆரோக்கிய உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டும்.

04. தாகம் ஏற்படும்போது சோடா போன்ற மென்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து சீனி சேர்க்கப்படாத இயற்கையான பழச்சாறு, செவ்விளநீர் அல்லது தூய்மையான நீரை அருந்தப் பழக வேண்டும்.

05.பொதுச் சுகாதாரப் பிரிவினர் சுகாதார அமைச்சின் ஆலோசனைப்படி குளிர்பான மற்றும் ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையங்களில் சீனிப் பாவனையின் அளவைக் கண்காணித்து தேவையான நடைமுறைகளைக் கடைப் பிடித்தல் அவசியமாகும்.

06.நாம் உறவினர் மற்றும் நண்பர்களின் வீட்டுக்குச் செல்லும் போது சொக்கலேட் பிஸ்கட்டு மற்றும் ஐஸ்கிறீம் போன்ற ஆரோக்கியமற்ற உணவுகளைக் கொண்டு செல்லாது பழங்கள் போன்ற ஆரோக்கியமான வற்றையே கொண்டு செல்லப் பழகிக் கொள்ள வேண்டும். எமது உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ சீனி மற்றும் மாச்சத்து அதிகமான தின்பண்டங்களை வழங்குவதன் மூலம் அவர்களை நாம் ஆரோக்கியமற்ற நோயாளராக மாற்றாது இருத்தல் அவசியமாகும்.

07. எந்தவொரு காரியாலயக் கூட்டமாக இருந்தாலும் விழாக்களாக இருந்தாலும் சீனியை வேறாக வைத்திருத்தல் அவசிய மாகும். இவ்வாறு வைத்திருக்கும் போது தேவைப்பட்டவர் தனக்குத் தேவையான அளவில் அதைச் சேர்த்துக் கொள்ள முடியும்.

08. இறுதியாக நாம் அனைவரும் அதிகரித்த சீனி மற்றும் மாச்சத்துப்பாவனையினால் நீண்டகால அடிப்படையில் ஏற்படுகின்ற பாரதூரமான பின் விளைவுகளையும் தொற்றா நோய்களையும் கருத்தில் கொண்டு இன்றே செயற்பட விளைவது காலத்தின் கட்டளையாகும்.

**"நாளைய மாற்றத்திற்காக இன்றே செயற்படுவோம்"**

Dr.M.அரவிந்தன்
நீரிழிவு அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால் அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

நூலகம் noolaham.org | aavanaham.org

# கல்வி மறுசீரமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

## பொதுநலவாய அமைப்பிடம் ஜனாதிபதி கோரிக்கை

(லண்டன்)

**இலங்கையில் கல்வி மறுசீரமைப்பு மிகவும் அவசியம். அதற்கு பொதுநலவாய அமைப்புகள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும்அவரது பாரியார்ஆகியோர் பொதுநலவாய நாடுகள் அமைப்பின், தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

இளையோரின் பங்கேற்பு மற்றும் கல்வி மறுசீரமைப்பு ஆகியவற்றுக்கு பொதுநலவாய அமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் டிஜிட்டல் மயமாக்கல் ஊடாக தொடர்பாடல்களை வலுப்படுத்தி கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இதேவேளை கானா நாட்டின் ஜனாதிபதியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொண்டார். (நி)

# மழையால் அதிகரிக்கும் நோய்த் தாக்கங்கள்

## சுகாதாரத் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் தற்போது சீரற்ற வானிலை காரணமாக தொடரும் மழையுடனான காலநிலையால் காய்ச்சல், டெங்கு, வயிற்றுப்போக்கு மற்றும் எலிக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களின் தாக்கம் அதிகரித்து வருவதாக சிறுவர் வைத்திய சாலையின் பிரதிப் பணிப்பாளரும் மருத்துவருமான தீபால் பெரேரா அறிவித்துள்ளார்.

இன்புளுவன்சா நிலைமையை கட்டுப்படுத்த வீட்டில் இருந்தாலும் முக்கவசம் அணிவது மிகவும் அவசியம் என்றும் வயிற்றுப்போக்கு நோய்கள் வராமல் இருக்க உணவு உண்ணும் போது கவனமாக இருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பதாக சுகாதாரத் திணைக்களம் எச்சரித்துள்ளது. (நி)

# ராஜபக்ஷக்களை ஓரம் கட்டுகிறாரா ரணில்?

## உதயகம்மன்பில சந்தேகம்

(கொழும்பு)

அடுத்து ஜனாதிபதி தேர்தலில் ரணில் தனது வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு ராஜபக்ஷ குடும்பம் தடையாக இருக்குமென தான் நம்புவதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

எனவே மக்க்ள் ஆதரவு குறைந்த ராஜபகஷர்களை ஓரங்கட்டுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதாக உதயகம்மன்பில சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

நாட்டில் மிகவும் மக்கள் ஆதரவு குறைந்த ஒருவராக பசில் ராஜபக்ஷ இருக்கின்றார். அவரே பொதுஜன பெரமுனவின் தலைவர் ஆவார். இதனால் தனக்கு சுமையாக இருப்பவர்களை எவ்வாறு இல்லாது செய்வது என்பதனை ஜனாதிபதி சிந்திக்கலாம்.

மேலும் தற்போதைய நிலைப்பாட்டின்படி சமகால அரசாங்கத்துடன் எந்த கொடுக்கல் -வாங்கலும் தனக்குக் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (நி)

# கீரி சம்பாவிற்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டுச் சந்தையில் கீரி சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக நாட்டிலுள்ள மில் உரிமையாளர்கள், அரசின் கட்டுப்பாட்டு விலையை மீறி கீரி சம்பாவை விற்பனை செய்வதால், கீரி சம்பாவின் விலை 25 முதல் 30 ரூபாய் வரை உயர்ந்துள்ளதாக அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் டி.கே.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் அரசாங்கத்தினால் பல்வேறு அத்தியாவசிய பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்பட்ட போதும் அதனை மீறி அதிக விலைக்கு ஏனைய பொருட்களும் விற்கப்படுவதை அவதானிக்க முடிக்கின்றது.

நாடு பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள நிலையில் அதிகளவான அரச ஊழியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதுடன் இலங்கையிலுள்ள மக்கள் தொடர்ந்தும் பாரிய இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். (நி)

# விடைத்தாள் மதிப்பீட்டு பணியை மேலும் துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப் பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை மேலும் பத்து விடைத்தாள் மதிப்பீட்டு நிலையங்கள் திறக்கப்படவுள்ளதாக இலங்கை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மொட்டுக்குள் பிளவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அண்மையில் நடைபெற்ற மே தின நிகழ்வுகளின் போது பசில் ராஜபக்ஷவிற்கு கூடுதல் முக்கியத்துவம் வழக்கப்பட்டமையினால் இந்த நெருக்கடி நிலை உருவாகியுள்ளது.

கட்சியின் அடுத்த தலைவர் பதவிக்கு பசிலை கொண்டு வர ஒரு சிலர் முயற்சிப்பதனால் இவ்வாறு கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவை கட்சியின் தலைமைப் பதவிக்கு கொண்டுவரும் முயற்சியானது கட்சியின நன்மதிப்பினை சிதைக்கும் செயல் என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.(4)

31ம் நாள் நினைவலைகள்



வல்லிபுரம் சின்னத்தம்பி

"உனக்காக வாழவில்லை
உலகத்திற்காக வாழ்ந்தாயே"

என்றும் உன்னுடன் நண்பர் குழாம்,
வினோபா நூலகம், வினோபா நகர் கச்சாய்.

(C-6490)

# சைவப்புலவர் நீ. நித்தியதசீதரனின் ஆறாவது சிரார்த்த தினம் இன்றாகும்



சிவகதி அடைந்த சைவப்புலவர் நித்தியதசீதரன் ஈழமணித் திருநாட்டிலே யாழ்ப்பாணம் பன்னாலையம் பதியிலே நித்தியானந்தம் பராசக்தி தம்பதியரின் தவப்பயனாக 1975 ஆம் ஆண்டு ஐப்பசி வெள்ளி தினத்திலே 24 ஆம் திகதி அவதரித்தார். நித்தியதசீதரன் தனது குருகுலக் கல்வியை பெற்றோரின் வழிகாட்டலுடன் திருமுறை ஓதுவார், திருமுறைச் செல்வன் இளையவர் நமசிவாயம் அவர்களிடம் கற்றார். இதனைத் தொடர்ந்து ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர்.கனகசபை வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியினை யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யா/அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

நித்தியதசீதரன் தான் கற்ற கல்விப் பயனை ஏனையவர்களுக்கும் போதிக்க வேண்டும் எனும் ஆர்வத்தினால் யுத்த மேகம் சூழ்ந்திருந்த 1990 களில் இந்துநாகரிகம்,இந்துசமயம் ஆகிய இரு பாடங்களினையும் கற்பித்தார்.

### மறைந்தார் மாண்பு

இவ்வாறு கல்விப் பணி ஒரு புறம் ஆற்றிட, இன்னொரு புறம் ஆலய வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டதன் விளைவாக சித்தன்கேணி ஸ்ரீநாககன்னி அம்மன் ஆலயம், கும்பிடச் சென்றவர் அங்கு நாகபூசணி அம்மன் திருவருள் கைகூட தனது முதலாவது சொற்பொழிவினை ஆற்றினார். இதற்கு செஞ்சொல்வேந்தன் எனும் பட்டம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். இவ்வாறு 2000 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சொற்பொழிவு 2017 இல் சிவனடி சேரும் வரை ஓய்ந்ததில்லை எனலாம்.

அவர் ஆன்மிகப் பிரசாரத்தினை ஒரு தவமாகவே கருதினார். பசி நோக்காது, கண் துஞ்சாது கருமமே கண்ணாக அவர் தனது சேவையை ஆலயங்களில் நல்கிய பெருந்தகை. 1998 இல் நடத்திய தேர்வில் சித்தியடைந்து இளஞ்சைவப்புலவர் எனும் பட்டத்தினையும் 1999 இல் சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்து சைவப்புலவர் எனும் பட்டத்தினையும் பெற்றதன் பேறாக அன்று முதல் முழுமையாகத் தன்னை சைவ வாழ்வியலுக்கும் அர்ப்பணித்து சேவையாற்றினார். 1997 இல் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பண்டிதர் தேர்வில் சித்தியடைந்து சைவசித்தாந்த பண்டிதர் எனும் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

பல ஆன்மிக சொற்பொழிவுப் பட்டங்களினையும் வாழ்த்துக்களையும் பெற்ற இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறையில் சைவசித்தாந்த முதுகலைமாணி பட்டப்படிப்பினையும் பூர்த்தி செய்து 28.02.2013 அன்று சைவசித்தாந்த முதுகலைமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். இதனைவிட அகில இலங்கை ரீதியில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத் தின் பாடவிதானத்துக்கு அமைய இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட இந்து தர்மாசிரியர் (2005 - 2006) தேர்வில் தேசிய ரீதியாக அதிவிசேட சித்தியினைப் பெற்றதற்காக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் இந்து தர்மாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்வாறு சைவப் பணியாற்றிய நித்தியதசீதரன் 13.05.2017 அன்று காலை வேளையில் சமயகுரவர்கள் வரிசையில் 42 ஆவது அகவையில் அமரபட்ச துதியை திதியில் சிவபதமேகினார். சைவசமய வாழ்வினைப் போதித்தது மட்டுமல்லாது வாழ்ந்து காட்டிய உத்தமனின் புகழை நாமும் பறைசாற்றுவதோடு குறுகிய வயதில் ஆற்றிய பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் சென்று வாழ்வோமாக.

என்.கவிதரன்,
(ஆசிரியர்-யா/யூனியன் கல்லூரி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரோடையில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடையின் வரலாற்றை சிங்கள பௌத்த வரலாறாகத் திரிபுபடுத்தும் நோக்குடன் திட்டமிட்ட பௌத்த விகாரை அமைப்பதற்கான முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் சிங்கள பௌத்த பேரினவாத அரசின் பூரண அனுசரணையுடன் தமிழ்த் தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமை சார் இனவழிப்பு செயற்பாட்டிற்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு கந்த ரோடையில் இடம்பெறவுள்ளது.

தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடை சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் இணைந்து தமிழ்த் தேசியப் பேரவை முன்னெடுக்கும் இப்போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய உணர்வாளர்களை கலந்து கொள்ளுமாறு பேரவையின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# சங்காபிஷேகம்

(கரணவாய்)

கொற்றாவித்தை உப்புக் கிணற்றடி அம்மன் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாக பூசையுடன் ஆரம்பமாகும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-60)



வடமாகாண கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற முல்லை.திவ்யனுக்கு ரூபா 5000 பணப்பரிசை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி அண்மையில் வழங்கி வைத்தார். (படம்: மகாலிங்கம்)

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 158 கிலோ கஞ்சா மீட்பு

(கண்டாவளை)

இலங்கைக்கு கடத்தும் நோக்குடன் காரில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த 158 கிலோ கேரள கஞ்சாவை மண்டபம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தமிழக ராமேஸ்வரம் ஆலய வாகன தரிப்பிடத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கார் ஒன்றினை கியூ பிரிவு பொலிஸார் மீட்டு மண்டபம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பொலிஸார் காரினை சோதனையிட்ட போது காரினுள் மறைத்து வைக்கப்பட்டு இருந்த 158 கிலோ கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர். குறித்த கஞ்சா , இலங்கைக்கு கடத்தும் நோக்குடன் காரில் கடத்தி வரப்பட்டு இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அதனை தொடர்ந்து ராமேஸ்வரம் ஆலய வாகன தரிப்பிடத்தில் உள்ள கண்காணிப்பு கமராக்களின் உதவியுடன் காரினை கொண்டு வந்து நிறுத்திய நபரை அடையாளம் கண்டு தேடி வருகின்றனர். (4-33-285)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் கடந்த புதன்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலைக்கு ஒரு தொகுதி தொற்று நீக்கி உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. மேற்படி உதவித்திட்டத்தினை சாரணர் இயக்கத்தின் முன்னாள் மாவட்ட ஆளுநர் ரோட்டேரியன் கௌரிராஜன் அவர்கள் வழங்கிவைத்தார். (படம்: சுபேசன்)

# மன்னாரிலிருந்து 10 பேர் தமிழகத்தில் தஞ்சம்



(மன்னார்)

இலங்கையில் இருந்து மேலும் ஒரு தொகுதி தமிழர்கள் அகதிகளாக தமிழகத்தில் நேற்று தஞ்சம் அடைந்துள்ளனர்.

தனுஷ்கோடி அடுத்த இரண்டாம் மணல் தீடையில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒரு கைக்குழந்தையுடன் 10 பேர் தஞ்சம் அடைந்தனர்.

இந்த நிலையில் அவர்களை மரைன் பொலிஸார் மீட்டு மண்டபம் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்று பின்னர் அகதிகள் மறுவாழ்வு முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (4-285)



வலிகாமம் கிழக்கு நிலாவரைப் பிரதேசத்தில் தனியார் ஒருவரின் முயற்சியினால் வெளிநாடுகளுக்கு யாழ்ப்பாண வாழைப்பழங்களை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவரது முயற்சியை பாராட்டும் அதேவேளை அங்கு தொழில் செய்வோரை ஊக்குவிக்கும் முகமாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அங்கு விஜயம் செய்திருந்தார். (படம்: மகாலிங்கம்)



தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ கட்சியின் தலைவர் சிறிசபாரத்தினம் மற்றும் அவருடன் உயிர் நீத்த போராளிகள் பொதுமக்களின் 37 ஆவது நினைவு தினம் நேற்று மன்னாரில் நினைவுகூரப்பட்டது. மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கம் டெலோ மாவட்ட தலைமை அலுவலகத்தில் அதன் மாவட்ட அமைப்பாளர் ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. (படம்: ஜோசப்நயன்)



கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாளின் தீர்த்தோற்சவம் நேற்று முன்தினம் இரணைமடு குளத்தில் சிறப்பாக இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)



யாழ்ப்பாணம் வடமராட்சி செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் 357, 000 ரூபா பெறுமதியான துவிச்சக்கர வண்டிகள் ஏழு பாடசாலை மாணவர்களுக்கு நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (படம்: கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின், அதை நன்றாகச் செய்து முடியுங்கள்.
– ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் தென்னை மரங்கள் அழுது கண்ணீர் விடுவது காணீரோ!

வடபகுதியில் வேகமாகப் பரவும் தென்னை ஈ தொற்றினால், தென்னை மரங்கள் அழிகின்ற ஆபத்தை நெருங்கியுள்ளன.

அதிலும் குறிப்பாக, தென்னை ஈ தொற்று செவ்விளநீர் தென்னைகள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

பொதுவில் யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து செவ்விளநீர் தென்னைகளும் ஈ தொற்றினால் பாதிப்படைந்துள்ளன.

தவிர, இன்னும் ஓரிரு மாதங்களில் நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ள அத்தனை செவ்விளநீர் தென்னை மரங்களும் பட்டுப்போகும் அளவுக்கு நிலைமை முற்றியுள்ளது.

இருந்தும் இது தொடர்பில் யாரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறு தென்னை மரங்கள் பட்டுப் போகின்ற ஆபத்தில் இருக்கின்ற போதிலும் தென்னை மரங்களைப் பாதுகாப்பதில் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லையாயின், இது தமிழ் மக்களின் தென்னை வளத்தை திட்டமிட்டு அழிக்கின்ற செயற்பாடோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

ஆம், யாழ்ப்பாணத்தில் வீடுகள் தோறும் இருக்கக்கூடிய தென்னை மரங்கள் நோயினால் கதறி அழுகின்றன.

அந்தோ! பிள்ளைகள் போல் எங்களை வளர்த்த எஜமானர்களே! நாங்கள் கொடிய தொற்று நோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்காகப் போராடுகின்றோம்.

ஆனால் எங்களை ஒருகணமேனும் நீங்கள் தலைநிமிர்ந்து பார்ப்பதாக இல்லை.

நீங்கள் பெற்ற பிள்ளைகள் உங்களை அழவைத்த சந்தர்ப்பங்கள் உண்டு.

ஏன்? உங்களை ஓரங்கட்டி ஒதுக்கிவிட்டதும் உண்டு. ஆனால் நாங்கள் அவ்வாறானவர்கள் அல்ல.

நீங்கள் எங்களை தண்ணீர் விட்டு வளர்த்தீர்கள். உங்களின் உதவிக்காக நாங்கள் தலையால் இளநீர் தந்து எங்கள் நன்றியை வெளிப்படுத்தினோம்.

ஆம், நீங்கள் நோய்வாய்ப்பட்டபோது நாங்கள் செவ்விளநீர் தந்து உங்களை ஆற்றுப்படுத்தினோம்.

ஆனால் இன்று எங்கள் இனம் அழியப் போகிறது. ஈ தொற்று எங்களை விடுவதாக இல்லை. நீங்கள் நடவடிக்கை எடுத்தால், உரிய சிகிச்சை அளித்தால் நிச்சயம் நாங்கள் மீண்டெழுவோம்.

நாங்கள் மீண்டெழுந்தால் உங்களுக்கு எங்கள் தலையால் நன்றி செலுத்துவோம்.

மரியாதைக்குரிய வடக்கின் ஆளுநர் அவர்களே! எங்கள் மீது பரவியிருக்கும் நோய் குறித்து நீங்கள் பேசாதிருப்பது ஏன்? அனைத்து அதிகாரிகளையும் துறைசார் நிபுணர்களையும் அழைத்து, வடபகுதியில் பரவியுள்ள தென்னை ஈ தொற்றைத் தடுக்க விசேட திட்டம் போடாதது ஏன்?

தயவுசெய்து எங்களைக் காப்பாற்ற உதவி செய்யுங்கள். விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். எங்கெல்லாம் ஆளணி இருக்கிறதோ அவர்களைத் திரட்டி எங்களைப் பாதுகாக்கும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள் என்று நம் வடபகுதி தென்னை மரங்கள் அழுவதுதான் கேட்கலையோ.

# வடக்குக்கிழக்கை தனித்தனியாக கையாளும் ரணிலின் தந்திரத்துக்குப் பலியாக வேண்டாம்

## ஐங்கரநேசன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பேன் என்று கூறிவருகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். முதற்கட்டமாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மே 09ஆம் திகதி பேசவுள்ள ஜனாதிபதி, மே 11, 12, 13ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பதற்கான அழைப்பையும் விடுத்திருக்கிறார்.

வடக்குக்கிழக்கைத்தனித்தனியாகக் கையாளும் ரணிலின் இந்தத் தந்திரத்துக்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலியாக வேண்டாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசுவதற்கு விடுத்திருக்கும் அழைப்புத் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,ஜனாதிபதி விடுக்கும் அழைப்பொன்றைத் தமிழர்தரப்பு நிராகரிக்க முடியாது. அவர் தீவிர சிங்கள-பௌத்த மேலாதிக்க நிலைப்பாடு உடையவராக இருப்பினுங் கூட நாட்டின் தலைவர் என்ற ரீதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு அவருடன் பேசியே ஆகவேண்டும். ஆனால், தனித்தனிக் கட்சிகளாக அல்லாது அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் உள்வாங்கி ஒருமித்த தமிழ்த்தேசியத்தின் குரலாகப் பேச்சுவார்த்தை மேடையில் அமருதல் வேண்டும். அப்போதே பேச்சுவார்த்தையை வலுவுடன் எதிர்கொள்ளமுடியும்.

ஜனாதிபதி வடக்குக் கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களைத் தனியாகச் சந்திக்கும் அழைப்பை அடியோடு நிராகரிக்க வேண்டும். வடக்குக்கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதற்கான கோரிக்கையை அழுத்தமாக.முன் வைக்க வேண்டும்.

தவறின் ரணில் விக்கிரமசிங்கவின் தந்திரத்துக்கு முன்னால் மீண்டும் தோற்றவர்களாகிவிடுவோம். மீண்டும் மீண்டும் தவறிழைத்த தரப்பாகவே தமிழர்கள் இருந்ததாக வரலாறும் பதிவுசெய்ய நேரிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (4-7-9)

## சத்திர சிகிச்சைக்குப் பின் கண் பார்வை இழப்பு

### விசாரணை ஆரம்பம்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பல நோயாளர்கள் பார்வை இழந்துள்ள நிலையில் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைகளுக்குப் பின்னரும் பார்வையில்லாத காரணத்தினால் மீண்டும் வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கண் சத்திர சிகிச்சையின் பின்னர் பார்வை இழந்த மேலும் 06 நோயாளர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய கண் மருத்துவமனையில் மருந்தைப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக சமீபத்தில் அறுவை சிகிச்சைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் மருந்தைப் பயன்படுத்திய பின்னர் இந்தச் சிக்கல் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

மருந்து மாதிரிகள் தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் மருத்துவமனைகளில் இருந்து சர்ச்சைக்குரிய மருந்து வகைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-7-9)

## இந்தியா செல்ல முயன்ற அறுவர் கடற்படையால் கைது

(வவுனியா)

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் இந்தியா செல்வதற்கு முயன்ற 6 தமிழர்களை கடற்படை கைது செய்துள்ளது.

வவுனியா பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் உட்பட 6 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக சென்ற நிலையில் நடுக்கடலில் வைத்து இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. (4-7-9)

## அருகில் உள்ளவர்களை அதிகம் நம்பக்கூடாது

### கோட்டா அட்வைஸ்

(கொழும்பு)

அருகில் உள்ளவர்களை அதிகம் நம்பக்கூடாது. நானும் அவ்வாறு நம்பித்தான் ஏமாந்தேன் என தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினார் முன்னாள் ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷ.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திக்க அவரின் வீட்டுக்குச் சென்றுள்ளார். இதன்போதே கோட்டாபய தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினார்.

[illegible] கள் சாகர.என்னை மறந்து விட்டீர்கள் என்றல்லவா நினைத்தேன் எனக் கூறி சாகரவை வரவேற்றார் கோட்டாபய.

அரசியல் நடவடிக்கைகள் எல்லாம் எப்படிப் போகின்றது என்று கோட்டாபய வினவ சிறப்பாகச் செல்கின்றது எமது கட்சிக்கு எதிராகப் பின்னப்புட்ட சூழ்ச்சி வலைகளை தற்போது அவிழ்த்து வருகின்றோம் என்று பதிலளித்தார் சாகர.

அருகில் உள்ளவர்களை அதிகம் நம்பக்கூடாது சாகர நானும் அவ்வாறு நம்பித்தான் ஏமாந்தேன். பதவிகளை வழங்கினேன். [illegible] என் [illegible] என்று கோட்டாபய தெரிவித்தார். (4-7-9)

## ஒட்சிசன் சிலிண்டர் திருடி அதிக விலைக்கு விற்பனை

### அறுவர் கைது

பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் நிரப்பப்பட்ட மற்றும் வெற்று ஒட்சிசன் சிலிண்டர்களை திருடி வேறு மாகாணங்களுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளுக்கு ஒட்சிசன் சிலிண்டர்களை வழங்கும் தனியார் நிறுவனமொன்றின் பணியாளர்களும் இதில் உள்ளடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலன்னறுவை பொது வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் பிரகாரமும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலன்னறுவை பொது வைத்தியசாலையின் ஒட்சிசன் விநியோகப் பிரிவின் ஒட்சிசன் சிலிண்டர் ஒன்றை தனியார் ஒட்சிசன் விநியோகஸ்தர்களுக்கு 30,000 முதல் 40,000 ரூபா வரையில் விற்பனை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. (4-7-9)

## கடன் மறுசீரமைப்பு ஜப்பான் வரவேற்பு

(கொழும்பு)

இலங்கைக்கான ஒருங்கிணைந்த கடன் மறு சீரமைப்பு திட்டத்தை ஜப்பானின் நிதியமைச்சர் வரவேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இந்த தகவலை ஜப்பானிய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் இருதரப்புக் கடன் வழங்குநர்களுக்கான ஒருங்கிணைந்த கடன் மறுசீரமைப்புத் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை செயல்முறையின் ஆரம்பத்தை அறிவித்துள்ளன.

இந்தநிலையில் எதிர்கால கடன் நெருக்கடிகளைத் தடுக்க கடன் தரவு வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை மேம்படுத்துவது அவசியம் என்று ஜப்பானிய அமைச்சர் சுனிச்சி சுசுக்கி தெரிவித்துள்ளார். (4-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 22.04.2023-01.05.2024

## மனையில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்புண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**




**சேவை செய்வதை பெருமையாக நினைக்கும் கும்ப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 22.04.2023 முதல் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். மூன்றாமிடம் என்பது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் இடமாகும். அந்த இடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது நல்ல வளர்ச்சி ஏற்படும் என்றாலும் ஏழரைச்சனியில் ஜென்மச்சனியின் ஆதிக்கமும் இருப்பதால் அவ்வப் போது இடையூறுகளும் வரலாம். பொருளாதாரம் போதுமானதாக இருந்தாலும் மனநிம்மதி குறைவாகவே இருக்கும். ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். இக்காலத்தில் வியாழக்கிழமை தோறும் குரு பகவானை வழிபடுவதோடு சுய ஜாதக ரீதியாக திசாபுத்திக்கேற்ற தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து.யோக பலம் பெற்ற நாளில் வழிபடுவது நல்லது.

### குரு இருக்கும் இடத்தின் பலன்!

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குருபகவான் உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். அவர் இப்பொழுது மூன்றாம் இடத்தில் அடியெடுத்து



வைக்கின்றார். மூன்றாமிடம் என்பது சகோதர சகாய ஸ்தானம் மற்றும் வெற்றிகள் ஸ்தானமாகும். மூன்றில் உள்ள ராகுவோடு குரு இணைவதால் ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் தான் குரு பலம் பெற்று நன்மைகளைச் செய்வார். மன்னவன் மூன்றில்நிற்க மாபெரும் மாற்றம்சேரும்! எண்ணிய காரியத்தில் இடையூறு வந்து கூடும்! தன்னம்பிக்கையோடு தைரியம் இணைந்திருந்தால் எந்நாளும் நன்மைசேரும்! இதயத்தில் மகிழ்வும் கூடும்! என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது. அந்த அடிப்படையில் தைரியத்துடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்பட வேண்டிய நேரமிது. எடுக்கும் முயற்சிகளில் சிறுசிறு இடையூறுகள் வரத்தான் செய்யும். உதவி செய்வதாகச் சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம். புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும் பொழுது கொஞ்சம் யோசிப்பது நல்லது. ஜென்மச் சனியின் ஆதிக்கமும் இருப்பதால் மருத்துவச் செலவுகளால் மனக்கலக்கம் ஏற்பட லாம். நட்பை பகையாக்கிக் கொள்ளா மல் பார்த்துக்கொள்வது உங்கள் புத்திசாலித்தனமாகும்.

### வெற்றிகளைக் குவிக்கும் வியாழனின் பார்வை!

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவான் உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கின்றார். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் பதிவதால் இல்லறம் நல்லறமாக அமையும். மனையில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உண்டு. வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் அல்லது நண்பர்கள் மூலம் அனுகூலமான தகவல் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வீடு, வாகனம் வாங்க கடன் கிடைக்கும். குருவின் பார்வை ஒன்பதாம் இடத்தில் பதிவதால் பாக்கிய ஸ்தானம் பலம்பெறுகின்றது. எனவே எதை எந்த நேரத்தில் செய்ய வேண்டுமென்று நினைத்தீர்களோ அதை, அந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். தீர்த்த யாத்திரைகள், தெய்வ வழிபாடுகள் போன்றவற்றில் நம்பிக்கை அதிகரிக்கும். மக்கள் சேவையின் மூலம் மகத்தான புகழைப் பெறுவீர்கள். பிள்ளைகளின் மேற்படிப்பு, வேலை சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். குருவின் பார்வை 11 ஆம் இடத்தில் பதிவதால் லாப ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே பொருளாதாரத்தில் உச்சநிலையை அடைவீர்கள். பணியாளர்கள் இப்பொழுது உங்களுக்கு பக்கபலமாக இருப்பர். பூமி வாங்கும் யோகம் முதல் புதிய தொழில் தொடங்கும் யோகம் வரை அனைத்தும் நிறைவேறும்.

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்!

அசுவதி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் அசுவதி நட்சத்திரக்காலில் கேது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது மனநிம்மதி குறையும். நேசித்தவர்களிடம் கூட யோசித்துப் பேசும் அளவிற்கு மன தைரியம் குறையும். வீடு மாற்றங்கள், இட மாற்றங்கள் நன்மை தருவதாக அமையும். தொழிலில் அதிக முதலீடுகள் செய்து அலைக்கழிக்க வைக்க வேண்டாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் முழு கவனத்தோடு செயற்பட வேண்டும். பதவி உயர்வு காரணமாக குடும்பத்தை விட்டுப்பிரிந்து சென்று வேறு இடத்தில் பணிபுரிய நேரிடலாம். பரணி நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குரு பகவான் பரணி நட்சத்திரமான சுக்கிரனுக்குரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். கூட்டாளிகளை மாற்றம் செய்ய நினைப்பீர்கள். உத்தியோகத்தைப் பொறுத்தவரை நல்ல சந்தர்ப்பங்கள் உங்களைத் தேடிவரும். இதுவரை கைநழுவிச் சென்ற வாய்ப்புகள் இப்பொழுது கைகூடி வரலாம். விரும்பிய இடத்திற்கு மாறுதல்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள். கார்த்திகை நட்சத்திரக்காலில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, குரு பகவான் கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியத் தொல்லை அகலும். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கலாம். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களின் நட்பால் பல நல்ல காரியங்கள் நடைபெற வழி வகுத்துக் கொள்வீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். கூட்டுத் தொழில் புரிவோர் தனித்து இயங்க முற்படுவர். நண்பர்களின் ஒத்துழைப்போடு நன்மை கிடைக்கும்.

### ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

மேஷத்தில் குரு, சஞ்சரிக்கும் காலத்தில் 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகுவும் கன்னி இராசிக்கு கேதுவும் செல்கின்றனர். உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்தில் ராகுவும் எட்டாமிடத்தில் கேதுவும் இருப்பதால் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. அதிலிருந்து விடுபட சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. செலவுகள் கூடும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையவில்லையே என்று கவலைப்படுவீர்கள். குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படலாம். கொடுக்கல்-வாங்கலிலும் திருப்தி ஏற்படாது. இதுவரை குருவுடன் ராகு சேர்ந்திருந்தது. இப்பொழுது ராகு விலகிவிட்டதால் குரு கூடுதல் பலம் பெறுகின்றார். அவரது பார்வைக்கும் பலன் இனி அதிகம் கிடைக்கும்.

### குருவின் வக்கிர காலம்

(12.09.2023 முதல் 20.12.2023 வரை) இக்காலத்தில் குரு பகவான் அசுவதி மற்றும் பரணி நட்சத்திரக்காலில் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணத் தேவைகள் அதிகரிக்கும். கைமாற்று வாங்கும் சூழ்நிலைகூட ஒருசிலருக்கு ஏற்படலாம். குடும்பத்தில் குழப்பங்கள் கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த சரள நிலை மாறும். ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வெளிநாட்டிலிருந்து மனக்கசப்பு தரும் தகவல் வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஏற்பட்ட மாறுதல் திருப்தி அளிக்காமல் போய் மீண்டும் பழைய இடத்திற்கே வந்து சேரும் வாய்ப்பு உருவாகலாம். மிகவும் கவனம் தேவைப்படும் நேரமிது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சியாகவே அமைகின்றது. பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். கல்யாணம போன்ற சுபகாரியங்கள், பெற்றோரின் மணி விழா போன்றவைகள் நடைபெறும் வாய்ப்பு உண்டு. தம்பதியர் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு செயற்பட்டால் சச்சரவு வராமல் பார்த்துக் கொள்ளலாம். குருவின் வக்கிர காலத்தில் கொடுக்கல்-வாங்கல்களில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய கூடிய இடமாற்றம் கிடைக்கும். குலதெய்வ வழிபாடும் குரு வழிபாடும் நன்மை தரும்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!

இல்லத்து பூஜையறையில் கற்பக விநாயகர் படம்வைத்து கவசம் பாடி வழிபடுவது நல்லது. மேலும் பிரதோஷ நேரத்தில் நந்தியம் பெருமானை வழிபட்டால் நலமும் வளமும் வந்து சேரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாலையில்...

ஜன்னல் கம்பியை வளைத்து கொள்ளையர்கள் உள்நுழைந்துள்ளனர்.

இவ்வாறு நுழைந்தவர்கள் வீட்டில் தாலிகொடி உட்பட சுமார் 15 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

வீட்டில் இரண்டு நாய்கள் இருந்த நிலையில் அவற்றிற்கு மயக்க மருந்து விசிறப்பட்டு திருடர்கள் உள்நுழைந்ததாக வீட்டு உரிமையாளர் தெரிவிக்கின்றார்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (4-7,9)

## பொதுமக்கள்...

டத்தில் கலந்துரையாடி அதனை நிறுத்த வேண்டும் என பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

அதேபோல் வசாவிளான் பகுதியில் 245 கிராம சேவையாளர் பிரிவில் இராணுவ வைத்தியசாலை கட்டப்பட்டு வருகின்றது.

இதில் 8 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்களின் காணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கண்காணித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறியிருந்தேன் கடந்த ஒரு வருடமாக இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பிரதேச சபையால் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாது இருந்துள்ளது. தற்போது தையிட்டி விகாரை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள்.

அதேபோல் வசாவிளான் பகுதியில் அமைக்கப்படுகின்ற இராணுவ வைத்தியசாலை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (4-7,9)

## வெடுக்குநாறி...

நாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு வந்த வீரசேகர, அங்கு நின்றவர்களிடம் இதனைக் குறிப்பிட்டார்.

சரத் வீரசேகர மற்றும் சிங்கள மக்கள் குழுவொன்று நேற்று வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பகுதிக்கு வந்திருந்தனர்.

ஆலயத்தில் பொங்கல் வழிபாடு நடைபெற்றது. வீரசேகர குழுவினரும் ஆலயத்தின் பொங்கலை வாங்கி உண்டனர்.

பின்னர், வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்தில் உயர் நீதிமன்றத்தை நாடப் போவதாக சரத் வீரசேகர, அங்கு நின்றவர்களிடம் கூறினார்.

நேற்று அங்கு கடுமையான மழை பெய்ததால், ஆலயத்தின் கீழ்ப்பகுதியில் 20 அடி தற்காலிக தகர கொட்டகையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதனை அகற்றுமாறு நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன், ஆலயத்தின் அடிப்பகுதியில் சிறிய தகர கொட்டகையமைத்து இளைஞன் ஒருவர் குளிர்பானம் உள்ளிட்ட சில பொருட்களை விற்று வந்தார். அந்த கொட்டகையையும் அகற்றுமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

அத்துடன், ஆலயத்துக்கு உழவு இயந்திரத்தில் வர முடியாது என்றும் குறிப்பிட்டார். (4-7,9)

## ஜீனில்...

படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் பதிவிட்டுள்ளார். அந்தப் பதிவில்,

சீன, அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க எரிபொருள் விநியோக நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கவுள்ளன.

இதற்கமைய நாட்டில் நிறுவப்படவுள்ள 450 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தலா 150 என மூன்றாக பிரிக்கப்பட்டு புதிய வெளிநாட்டு எரிபொருள் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படும்.

ஒரு மாதத்திற்குள் புதிய விநியோகத்தர்கள் இலங்கையில் அவர்களின் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

அதன் பின்னர் எரிபொருள் விலைகள் மேலும் குறைவடைவதுடன், விரைவில் மின் கட்டணத்தில் சலுகைகளும் மக்களுக்கும் வழங்கப்படும் எனத் தெரிவித்தார். (4-7,9)

## பல்கலைக்கழக...

சந்திப்பில் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பிலான விடயங்கள் பற்றி பேசும்போதே அவர் இவ்விடயத்தை தெரிவித்தார்.

குறித்த வளாகம் புலிகளின் பயன்பாட்டில் இருந்த நிலையில் இராணுவம் கிளிநொச்சியை விடுவித்த பின்னர் தமது முகாமாக மாற்றிக்கொண்டனர். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கதைத்து அதனை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக் கொடுத்துள்ளோம்.

விரைவில் கிளிநொச்சி வளாகத்தை கிளிநொச்சி பல்கலைக்கழகமாக மாற்றித் தருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7,9)

## பிரிட்டனின்...

74 வயதான மூன்றாம் சார்லஸ் நேற்று பிரித்தானியாவின் மன்னராக முடிசூட்டப்பட்டார்.

லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில், பரிசுத்த நற்செய்தியின் மீது கைவைத்து மூன்றாம் சார்லஸ் மன்னர் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்.

தனது வாக்குறுதிகளை செயற்படுத்தவும், நிறைவேற்றவும் உறுதியளித்த அவர், தேவாலயங்கள் உட்பட சீர்திருத்தக் கொள்கைகளைப் பின்பற்றுவதாகவும் தெரிவித்தார்.

வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடந்த விழாவில், கேன்டர்பரி பேராயர், மிகவும் மரியாதைக்குரிய ஜஸ்டின் வெல்பி முடிசூட்டு பிரமாணத்தை செய்து வைத்தார்.

விழாவில் 100 நாட்டுத் தலைவர்கள் உட்பட சுமார் 2,300 பேர் கலந்து கொண்டனர்.

வெஸ்ட்மின்ஸ்டர் அபே யில் நடைபெற்ற முடிசூட்டு விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டார். (4-7,9)

## ஆளுநர்களை...

எனினும் ஐக்கிய தேசிய கட்சியின் முக்கியஸ்தரான ஜோன் அமரதுங்க வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (4-7,9)

# இலங்கையில் மூன்று திட்டங்களை அமுல்படுத்த இந்தியா ஆர்வம்

(கொழும்பு)

இலங்கையில் மூன்று திட்டங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவது குறித்து இந்திய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இலங்கையர்களுக்கு நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குதல், சூரிய சக்தி திட்டம் மற்றும் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பது ஆகிய மூன்று அவசர வேலைத்திட்டங்களாகும்.

ஜனாதிபதியின் தலைமை அதிகாரி மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்குவதற்கு ஆதரவளிக்க இந்திய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், அது தொடர்பான பணிகள் தற்போது மும்முரமாக உள்ளதாகவும், விரைவில் அது ஆரம்பிக்கப்படும் எனவும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

வடக்கில் மூன்று தீவுகளில் சூரிய மின்சக்தி திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அதனை விரைவில் ஆரம்பிப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, இந்தியாவில் இராமேஸ்வரம் மற்றும் தலை மன்னார் இடையே படகு சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், காங்கேசன்துறைக்கும் இந்தியாவின் காரைக்காலுக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான பணிகள் இறுதிக்கட்டத்தில் இருப்பதாக சாகல ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகளை விரைவில் தொடங்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். (4-7,9)

# 20 இலட்சம் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதே இலக்கு

## சுற்றுலாத்துறை அமைச்சர்

(கொழும்பு)

இந்த ஆண்டில், 20 இலட்சம் இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை சுமார் 530 மில்லியன் அமெரிக்க டொலர்களை சுற்றுலாத்துறையின் மூலம் ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 482.3 மில்லியனாக இருந்தது.

இந்தநிலையில் 2023ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றுலாத்துறையில், மொத்தம் 3 பில்லியன் டொலர் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (4-7,9)

## 13 வயது சிறுமி நீரில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

மதுரத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பகஸ்பிட்டிய பகுதியில் பெலிஹூல் ஓயாவில் நீராடச் சென்ற 13 வயது சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் இவ் அனர்த்தம் நேர்ந்துள்ளது.

மேலும் 12 வயது சிறுவன் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீராடும்போது நீரில் அடித்துச் செல்லப்பட்ட சிறுமியை மீட்க சிறுவன் முயற்சித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (4-7,9)

## வடக்கு...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் இதனை தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில்,

11ம், 12ம், 13ம் திகதிகளில் வடக்கு தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அழைத்து அதிகாரப்பரவலாக்கல், வடக்கிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாட அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழர் தாயகமாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் கருதப்படுவதால் அதிகாரப்பரவல் வடக்கு கிழக்கைச் சார்ந்தது.

ஆகவே இதில் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படாதவிடத்து குறித்த பேச்சுவார்த்தையைப் புறக்கணிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எதிர்பார்த்துள்ளோம்.

இதேவேளை கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களையும் அழைக்க வேண்டுமென பிரதான கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைக்கின்றோம் எனத் தெரிவித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், என்.ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரட்ணம், பா.கஜதீபன் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் செயலாளர் துளசி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சிரேஷ்ட துணைத் தலைவர் ஆர்.இராகவன், ரெலோவின் பேச்சாளர் கு. சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (4-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(15247)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

# காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒரு பரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக்காணிகள் விற்பனைக்குண்டு

- தங்குவிடுதி மற்றும் வீடமைப்பதற்கு உகந்தது.
- மொத்தமாக ஆறு பரப்பு உண்டு.

(15449) 077 735 4470

# காணி விற்பனைக்கு

A9 வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள பளிக்கர் நீராவியடி புளியங்குளத்தில் இரண்டு ஏக்கர் கொண்ட உறுதிக்காணி விற்பனைக்குண்டு

- எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற்கு உகந்தது.
- மொத்தமாக எட்டு ஏக்கர் உண்டு.
- மாங்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகள் நாட்டப்பட்டுள்ளது.

(15449) 077 735 4470




# காணிகள் விற்பனைக்கு

நல்லூர் சுற்றாடலில் காணிகள் விற்பனைக்குண்டு. வைமன் வீதியில் 3 பரப்பு 15 குளி, கோவில் வீதியில் 2 பரப்பு, 1 3/4 பரப்பு, 1 1/2 பரப்பு வீட்டுடன், மேலும் பல காணிகள் விற்பனைக்கு. கோவில் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு, காணி, வீடு வாங்கவும் விற்கவும் நேரடித் தொடர்புகளுக்கு சலுகை உண்டு. வீடுகள் வாடகைக்கு கொடுக்க விரும்புவோர், எடுக்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

(C-6491)

ராஜா சொத்து விற்பனை நிறுவனம்

077 603 3259

# VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-6494)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

# உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6494)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# மணமகன் தேவை

இடம்: பருத்தித்துறை
நட்சத்திரம்: மூலம் 1ம் பாதம்
பாவம்: 23
வேலை: சித்த வைத்தியர், இந்து கௌரவ குடும்பம்
வயது: 36
எதிர்பார்ப்பு: அரச வேலை மட்டும்

077 389 9115
Whatsapp

# VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



(15337)

077 544 8503

# காணி விற்பனைக்கு

நல்லூர் நாயன்மார்கட்டு வீதியில் நல்ல அயற் சூழலான இடத்தில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடுகள், பண்ணைகள் அமைக்க உகந்த இடம். (தரகர் தேவையில்லை) விலை பேசித் தீர்மானிக்கலாம். ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

(15461)

076 231 8693

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் :
காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை

(15484)

தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457

# கடை விற்பனைக்கு

வெள்ளவத்தை Galle Road Arpico இற்கு முன்பாக (1.35 பேர்ச் 375 sqft) கடை விற்பனைக் குண்டு. தரகர் தேவையில்லை. (விலை 45M)

(C-6489)

தொடர்பு :
077 279 8192

# வேலையாட்கள் தேவை

கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் (யாழ்/ இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) சிற்றுண்டிச் சாலைக்கு ஆண் வேலையாட்கள் தேவை.

(15478)

தொடர்புகளுக்கு
077 275 9799

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 05 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்.

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி தொடக்கம் மாலை 06 மணிவரை

(15484)

தொடர்புகளுக்கு :- ஜெயம்
077 814 7389, 077 986 5457

# பணியாளர் தேவை



## குளிரூட்டி தொழில்நுட்ப வல்லுநர் (AC)

- குளிரூட்டி தொழில்நுட்ப வல்லுநர் கற்கை நெறியை அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி ஆணையம்/ நிறுவனத்தில் 06 மாதம் அல்லது 01 வருட கற்கையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- குளிரூட்டி பழுதுபார்ப்பதில் குறைந்தபட்சம் 01 வருட கால அனுபவம் இருக்க வேண்டும்.
- பல்வேறு வகையான குளிரூட்டிகள் மற்றும் குளிர்பதன அமைப்புகளை பழுது பார்ப்பதில் நல்ல அறிவும் திறமையும் இருக்க வேண்டும்.
- முழு நேர வேலை.

## சாரதி

- சாரதியாக குறைந்தபட்சம் 06 மாதம் அல்லது 01 வருட கால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- செல்லுபடியாகும் இலகுரக வாகன சாரதி அனுமதி பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
- குளிரூட்டி பழுதுபார்ப்பதில், வாகனம் ஓட்டுதல் பற்றிய நல்ல அறிவும் பண்புகளும் இருத்தல் வேண்டும்
- முழு நேர வேலை.

(15477)

தொடர்புகளுக்கு
021 222 0855 / 077 987 7309

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.